பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 13 வெள்ளிக்கிழமை (27.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 191




# புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்த இந்தியா கோரவில்லை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கையில் முன்னெடுக்கப்படும் யுத்தம் குறித்து இந்தியாவுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. இந் நிலையில் போரை நிறுத்துமாறு இந்தியா ஒருபோதும் குறிப்பிடவில்லை என ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிக்கு மாணவர்களின் பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை வீச்சு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பல்கலைக்கழக பிக்கு மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும் தண்ணீர் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

பிக்கு மாணவர்களுக்கான பல்கலைக் கழகத் தங்குவிடுதி மூடப்பட்டுள்ளதைக் கண்டித்துக் கொழும்புப் பல்கலைக்கழகப் பிக்கு மாணவர்கள் சங்கம் ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு விகாரமாதேவி பூங்கா முன்றலிலிருந்து ஜனாதிபதி மாளிகை நோக்கி நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

இதில் 500ற்கும் அதிகமான பிக்குமாணவர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டப் பேரணி பித்தளைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கடும் மோதல் 12 விடுதலைப்புலிகள் பலி

### இராணுவம் அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தின் மன்னார்-பூநகரி வீதியிலுள்ள பாப்பாமோட்டைக்குத் தென்பகுதியிலும் பாப்பாமோட்டைக்குக் கிழக்குப் பகுதியில் மராட்டிப்பன்னாட்டி, மின்னரிங்கள் ஆகிய இடங்களில் நேற்று அதிகாலை 6 மணி முதல் இராணுவத்தினர் பின்தள எறிகணைச் சூட்டாதரவோடு மும் முனைகளில் விடுதலைப்புலிகளின் பிரதேசத்தினுள் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவிக்கின்றது.

விடுதலைப்புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் படையினர் முன்னேறி வருவதாகக் கூறியுள்ள பாதுகாப்பு அமைச்சகம், இப் பகுதிகளில் இடம்பெற்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் முன்னகர்வு முறியடிப்பு 8 படையினர் பலி; 24 பேர் படுகாயம்

### விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வவுனியா பாலமோட்டையில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு முயற்சி தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் 8 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 24 பேர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

பாலமோட்டையிலுள்ள விடுதலைப்புலிகளின் முன்னரண்களை இலக்கு வைத்து நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆட்லறி மற்றும் மோட்டார் எறிகணைகளின் செறிவான பின் தள சூட்டாதரவுடன் படையினர் முன்னகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர முறி (10ஆம் பக்கம் பார்க்க)

## இந்.பிரதமரின் இலங்கை விஜயத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய முஸ்தீபு

(சென்னை)

கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் சார்க் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை வருவுதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு தமிழகத்தின் எதிர்க்கட்சிகள் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதியில் இறங்கிப் போராடப் போவதாகத் தெரிவித்திருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தற்பொழுது வெளிநாடு சென்றிருக்கும் தமது தலைவர் வை.கோ நாடு திரும்பியதும் இறுதி முடிபு எடுக்கப்படும் எனக் கூறியுள்ளது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட பல கட்சிகள் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இதனால் தமிழகத்தில் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு பலதடவைகள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தபோதும் அதனை நிறைவேற்றாததால் பிரதமர் இலங்கை செல்வதை நாங்கள் விரும்பவில்லை என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பி (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து பிற மாவட்டத்திற்குப் பிரயாணம் மேற்கொள்வதற்கான கப்பல் சேவை இன்று (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

தரம்-05 புலமைப் பரிசில்

பயிற்சி வினாத்தாள் - 06

பகுதி -II

## ஊரடங்கு நேரத்தில் மாற்றம் இல்லை

யாழ்.குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் இரவு 9.00 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரையே அமுல்படுத்தப்பட்டிருக்கும் என பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமை யகம் அறிவித்துள்ளது.

நேற்றும் இரவு 9.00 மணிக்கே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை நேற்று முதல் இரவு 7.00 மணி தொடக்கம் அதிகாலை 5.00 மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கும் என வெளியான செய்தி தவறானது எனவும் பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ச)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய சேவை பெறுவதில் சிக்கல்

### பொதுமக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் கடமை நேரங்களில் தனியார் மருந்தகங்களுக்குச் சென்று சேவை புரிவதால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவதாக ஜனாதிபதி, யாழ்.மாவட்ட நீதிபதிகள், அரச அதிபர் உள்ளிட்டோருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏழை மக்கள் எனக் குறிப்பிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கையொப்பம் இட்டு இம் மகஜரை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அம் மகஜரில் குறிப்பிட்டுள்ளவற்றின் சில பகுதிகள் வருமாறு,


யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் இளைஞன் சுட்டுக் கொலை

புத்தூர் மேற்கு ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இளைஞன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தனது வீட்டிற்கு வெளியே நண்பர் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் இவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜசீந்தரன் (வயது-35) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5)








வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று கல்லூரியின் குவாட்ராங்கில் முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், வருடாந்த அறிக்கையினை வாசிப்பதனை முதலாவது படத்திலும் பரிசில்கள் பெறும் மாணவிகளை அடுத்துவரும் படங்களிலும் காணலாம். (படங்கள்:கோபி)

# அதிகாரப் பரவலாக்கல் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ்,காணி, கல்வி மற்றும் நிதி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை அடங்கிய அரசியல் யோசனைத் திட்டமொன்றை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் முன்வைப்பதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தீர்மானித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காணப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டில் அந்தக் கட்சி இருப்பதாகவும், இவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் யோசனைத் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு, பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் ஆதரவாளர்கள் ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கான பிரதிநிதிகள், கட்சித் தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா கொழும்பு ஊடகமொன்றிடம் கூறினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குப் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பாக கட்சி ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மேயர் சிவகீதா பிரபாகரனை அல்லது என்னை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கான பிரதிநிதியாக நியமிப்பது பற்றி கட்சி ஆராய்ந்து வருகிறது.

எனினும் முதலமைச்சரே இறுதித் தீர்மானித்தை எடுப்பார் என்றார் ஆசாத் மௌலானா.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் தமது பிரதிநிதிகள் இரண்டு மூன்று அமர்வுகளில் கலந்து கொண்ட பின்னர் கட்சியின் அரசியல் யோசனைத் திட்டம் முன்வைக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளின் நியமனத்துக்காக தாம் காத்திருப்பதாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை மீளமைப்பது பற்றி ஜனாதிபதி ஆலோசித்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

### திறந்த பல்கலைக்கழக எந்திரவியல் பீட மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலைய புதிய மற்றும் பழைய மாணவர்கள் எந்திரவியல் பீட பதிவுக்காக கொழும்பு செல்வதற்குரிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சகல புதிய மற்றும் பழைய மாணவர்களை பதிவு தொடர்பான ஆவணங்களுடன் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு இன்று காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். (ச)

### பொருள் விநியோகம் குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ப.நோ.கூ.சங்க பொருள் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலுக்கு ப.நோ.கூ. சங்க தலைவர்களையும் பொது முகாமையாளர்களையும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறியத்தந்துள்ளார். (ச)

# வன்முறைகளின் மூலம் தேர்தலில் வெற்றி பெற அரசு முயல்கிறது

## ஐ.தே.க செயலாளர் திஸ்ஸ குற்றச்சாட்டு

வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கம் வெற்றிபெற முயல்வதனையே வடமத்திய மாகாணத்திலுள்ள ஐ.தே.க அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் வெளிப்படுத்துகின்றன என்று ஐ.தே.கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமத்திய மாகாணஎல்லைக்குள் அமைந்துள்ள பாலித ரங்க பண்டார எம்.பியின் ஆனமடுவ அலுவலகமும் ரஞ்சித் அலுவிஹார எம்.பியின் தம்புள்ளையில் இருந்த அலுவலகத்தின் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த 25ஆம் திகதி பாலித ரங்க பண்டாரவுக்கு சொந்தமான மாதம்பே அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் அரசின் வன்முறைக் கலாசாரத்தை பிரதிபலிக்கின்றது. வட மத்திய சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு குறைந்துள்ளது என்றார். (ச-5)

### மகேஸ்வரனின் நினைவு தினத்தினை முன்னிட்டு யாழில் இன்று அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் 6ஆம் மாத நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் இன்று நண்பகல் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

காரைநகர் ஈழத்து சிதம்பரம் ஆலய அறப்பணி நிலையம், நல்லூர் துர்க்கா மணி மண்டபம், தொண்டமானாறு செல்வச் சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமம் என்பவற்றில் அன்ன தானம் வழங்கப்படும். (ச)

# ஜே.வி.பிக்கு எதிரான நாடகமே அஞ்சான் உம்மா விவகாரம்

## ஜே.வி.பியின் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

கட்சியில் நிலைத்திருக்கவேண்டும் என்ற கட்டாயப்படுத்தலையோ அல்லது கட்சிக்குள் இருக்கும்போது கட்டுப்பாடுகளை விதித்து அவற்றை பின்பற்றவேண்டுமென்றோ மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களுக்கு ஒருபோதும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படவில்லை.

அந்தவகையில் மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து விலகிச் சென்றதாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் அஞ்சான் உம்மாவுக்கும் அச்சுறுத்தல்கள் எதுவும் விடுக்கப்படவில்லை.

அவர் இன்றுதான் (நேற்று) மறுவீடு சென்றுள்ளார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் தேசிய ஆவணாக்கல் மற்றும் நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறியதாவது,

சுயாதிபத்தியத்துடன் கட்சியில் இயங்கவும் நிலைத்திருக்கவும் தேவையான சுதந்திரம் மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களுக்கு உண்டு.

கட்சியில் நிலைத்திருக்க விரும்புபவர்கள் நிலைத்திருக்கலாம். அல்லது அதனை விட்டு விலகிச்செல்ல விரும்புபவர்கள் விலகிச் செல்லலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு.

இதற்கான எவ்வித தடையினையும் மக்கள் விடுதலை முன்னணி விதிக்காது. கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி ஜே.வி.பிக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட நாடகத்தின் ஒரு அங்கமே அஞ்சான் உம்மா விவகாரம்.

அந்நாடகத்தின் ஒரு பாத்திரத்தை ஏற்ற அஞ்சான் உம்மா அதனை சிறப்புற நடித்து முடித்திருக்கிறார். இதனை எண்ணி நாம் வருத்தப்படப்போவதில்லை என்றார். (ச-5)

### பொறிவெடியில் சிக்கி 2 அதிரடிப்படையினர் காயம்

அம்பாறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறிவெடியில் சிக்கி சிறப்பு அதிரடிப்படையினர் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பகுதியில் நேற்று முன்தினம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படையினர் விடுதலைப் புலிகளின் பொறிவெடிகளில் சிக்கியுள்ளனர்.

இதில் அதிரடிப்படையினர் இருவர் படுகாயமடைந்துள்ளனர். (ச-5)

# களஞ்சியத்திலுள்ள பொருட்கள் விற்பனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக களஞ்சியங்களில் அரிசி, பருப்பு போன்ற பொருட்கள் இருப்பாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருட்களை பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவிக்கும் தனியார் கடை உரிமையாளர்கள் பொருட்களுக்கான வழங்கற்கட்டளையினை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று பொருட்களை களஞ்சியத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறியத்தந்துள்ளார்.

களஞ்சியத்திலுள்ள பொருட்களின் விபரம் வருமாறு,

| பொருள் | (1Kg) விலை (ரூபா) | அளவு (Mt) |
|---|---|---|
| அரிசி தீட்டல் / உடையல் | 57.50 | 195 |
| அரிசி தீட்டல் / உடையல் | 62.00 | 100 |
| அரிசி தீட்டல் / உடையல் | 64.00 | 89 |
| பருப்பு சிவப்பு | 138.00 | 600 |
| பருப்பு மஞ்சள் | 118.50 | 100 |

அபூர்வ ஜோதிடம்

தீராத கடும் அவஸ்த்தை தரும் நோய் குணமாகும் மருந்தியல்

அதிர்ஷ்ட பலன் அறிதல்

தினமும்:- 8.00 - 1.00 pm

உயரப்புலம் பிள்ளையார் கோவிலடி, தபால்பெட்டி லேன், ஆனைக்கோட்டை.

(389)

## இன்று ஒரு தகவல்

# ராசி பலன்

ஒருவர் வேகமாக வந்து அவசர அவசரமாக ஒரு பத்திரிகை வாங்கினார். அதைவிட அவசரமாக அதைப் புரட்டி, ஏதோ ஆர்வமாகப் பார்த்தார். பின்பு அதை மடித்து வைத்துக்கொண்டு அவசரமில்லாமல் நடந்து போனார்.

அவரிடம் மெதுவாகப் போய் ''அப்படி என்ன சார்... ஆர்வமாகப் பார்த்தீங்க'' என்று கேட்டேன். கடையில் பேப்பர் வாங்கியவுடன் முதல் காரியமாக அதைப் பார்த்துவிடுவேன் சார்! என்றார்

''எதை?'' என்று கேட்டேன். ''அதுதான் சார்... ராசி பலன்...! அதைப் பார்த்தால் தான் எனக்கு எல்லாம் சரியாக ஓடும்!'' என்றார். ''அதுசரி சார்... ராசிபலனில் என்ன போட்டிருக்கோ அதன் பிரகாரம் அன்றைக்கு சரியாக நடக்குமா?'' என்று கேட்டேன்.

''நடக்குதோ இல்லையா என்றெல்லாம் சரிபார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்சார்... காலையில் அதைப் பார்க்க வேண்டும்... அதில் ஒரு ஆவல்... அவ்வளவுதான்!'' என்றார்.

கிட்டத்தட்ட எல்லோருமே இதே மாதிரி ஒரு ஆர்வத்தில் தான் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ராசி பலன் பழக்கம் தமிழர்களிடம் ரொம்ப அதிகமாக இருக்கிறது என்கிறார் ஒரு பேராசிரியர் (க.ப.அறவாணன்).

ராசி -பலன் போடாமல் வரும் நாளிதழ்கள் மிகக் குறைவு! அது போட்டால்தான் அதிகமாக விற்பனையாகிறது. அதனால் நம்பிக்கையில்லாதவர்கள்கூட அதைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ராசிபலன் பார்த்துவிட்டு லொத்தர் சீட்டு வாங்குபவர்களும் உண்டு. வான் மண்டலம்-பூ மண்டலத்தை பாதிக்கிறது. உண்மைதான். அதை அறிவியல் பூர்வமாக சிந்திக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு... இன்று ''நண்பரால் பணவரவு'' என்று ராசிபலன் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நம்முடைய நண்பன் இன்று பணம் கொண்டுவந்து கொடுக்கப்போகிறான் என்பது ஆகாயத்திலுள்ள நட்சத்திரத்துக்கு எப்படித்தெரியும்!

அதுவுமில்லாமல் இங்குள்ள நண்பர்கள் எத்தக் காலத்தில் பணம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள்! நண்பர்களை, பக்கத்திலிருக்கும் நாமே புரிந்து கொள்ள முடியவில்லை... எங்கேயோ இருக்கும் நட்சத்திரத்துக்கு என்ன தெரியும்?

ஒரு காலத்தில் நாம் வாழும் பூமி ஒரே இடத்தில் நிலையாக இருக்கிறது என்றும் சூரியனும் சந்திரனும் பூமியை சுற்றி வருகிறது என்றும் நம்பிக்கொண்டிருந்தோம். அந்தக்காலத்தில் உருவான ராசிபலன் கொள்கையை, சூரியனைச் சுற்றித்தான் பூமி வருகிறது என்று தெரிந்து கொண்டும் இந்தக் காலத்திலும் நம்பிக்கொண்டிருப்பது ரொம்ப விநோதம் தான்!

இந்த ராசிபலன் பார்க்கும் பழக்கம் நமது ஊக்கத்தை இழக்கச்செய்யும் ஒரு பழக்கம். அது வேண்டாம் விட்டு விடுங்கள்! உதாரணத்துக்கு ஒரு சோதனை செய்து பார்ப்போம்! ஒரேநாள் வந்த தினசரி பேப்பரில் எனது நண்பர் ஒருவரின் ராசிக்கு (ரிஷபம்) என்ன ராசி பலன் என்று பார்த்தோம்!

ஒரு பேப்பரில் ''செலவும் சிரமமும்'' என்று போட்டிருந்தது! (தினமலர் 26.02.93) இன்னொரு பேப்பரில் ''சுலபமாக நன்மை'' என்று போட்டிருந்தது! (தினமணி 26.02.93) இதில் எதை நம்புவது? நீங்களும் ஒரு நாள் இதை சோதித்துப் பாருங்கள்... அதற்குப் பிறகு இந்தப் பழக்கத்தை விட்டுவிடுவீர்கள்.

நானும் என்னுடைய நண்பர் ஒருவரும் ஒருநாள் கடையில் பேப்பர் வாங்கினோம். நண்பர் ராசிபலனில் நம்பிக்கை இல்லாதவர். இருந்தாலும் ''உங்களுடைய ராசியைச் சொல்லுங்கள்... பலன் என்னவென்று பார்க்கலாம்!'' என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே? ''அதெல்லாம் டுப்... அதை ஏன் பார்க்கிறீர்கள்?'' என்றார் ''சும்மா சொல்லுங்கள்!'' என்றேன்.

''என் ராசி தனுசு... அதில் ''பணவரவு'' என்று போட்டிருக்கும்!'' என்றார். நான் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன் அதில் பணவரவு என்றுதான் போட்டிருந்தது! ''அது எப்படி சார்... பார்க்காமலேயே அவ்வளவு கரெக்டா சொன்னீங்க?'' என்று கேட்டேன்.

அவர் மெதுவாக கிட்டவந்து காதோடு காதாக... ''அந்தப் பேப்பருக்கு தினமும் ராசிபலன் எழுதிக்கொடுக்கிறதே நான் தானே!'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் மொழித்தினம் - 2008
# கோட்ட மட்டப் போட்டி முடிவுகள்

**ஊர்காவற்றுறைக் கோட்டம்**

தீவகக் கல்வி வலயத்தின் ஊர்காவற்றுறைக் கோட்டமட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றமாணவர்விபரங்கள்வருமாறு,

**வாசிப்பு** *பிரிவு-1*

ம.நிவேதிகா-புனித மரியாள் ம.ம.வி., பா.கவிதா-யாழ்ற்ரன் கல்லூரி, இ.இந்துஜா-நாரந்தனை றோ.க.வி.

*பிரிவு-2*

ச.வினுஜா-புனித மரியாள் ம.ம.வி., ந.தீபகா-சுந்தரமூர்த்திநாயனார் வி., சு.கிருபாகரன்-எழுவைதீவு முருகவேள் வி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

*பிரிவு-1*

ம.ஐசூரியா-எழுவைதீவு முருகவேள் வி., இ.துலக்சன்-காரை ஊரி அ.மி.த.க.வி., அ.யனுஜா-நாரந்தனை கணேச வி.

**இசையும் அசைவும்** *பிரிவு-1*

கோ.விஜீபா-அனலைதீவு வடலூர் அ.த.க., கி. துர்க்காயினி-சுந்தரமூர்த்திநாயனார்வி., ம.கிறைண்டா-புனிதமரியாள் ம.ம.வி.

**பேச்சு** *பிரிவு-1*

சி.விசாளினி-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., சு.கஜந்தன்-காரை மெய்கண்டான் வி., த.குணதரன்-யாழ்ற்ரன் கல்லூரி.

*பிரிவு-2*

சி.தர்ஷிக்கா-சுந்தரமூர்த்தி நாயனார் வி., அ.சாள்ஸ் டிலக்ஷன்-புனித அந்தோனியார் கல்லூரி, த.ஆரணி -யாழ்ற்ரன் கல்லூரி.

*பிரிவு-3*

செ.அருள்ராஜ்-புனித அந்தோனியார் கல்லூரி, அ.யாழினி-நாரந்தனை றோ.க.ம.வி., தி.கஜீவன்-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

*பிரிவு-4*

கோ.மிரோஜா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., வ.கஜனி-யாழ்ற்ரன் கல்லூரி, பா.செந்தியோன்சன்-புனித அந்தோனியார் கல்லூரி.

*பிரிவு-5*

அ.யோனிற்றன் யோசப்-புனித அந்தோனியார் கல்லூரி, க.ரூபிகா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., செ.சசிகலா-யாழ்ற்ரன் கல்லூரி.

**பாவோதல்** *பிரிவு-1*

பு.விதுஷா-நாரந்தனை கணேச வி., செ.சிறிமாலா-யாழ்ற்ரன் கல்லூரி, சு.டிலக்ஷனா-காரை ஊரி அ.மி.த.க.வி.

*பிரிவு-2*

ந.கல்யாணி-யாழ்ற்ரன் கல்லூரி, அ.சுகந்தன்-புனித அந்தோனியார் கல்லூரி, கா.டிலாணி-சுந்தரமூர்த்தி நாயனார் வி.

*பிரிவு-3*

ஞா.கலைச்செல்வி-யாழ்ற்ரன் கல்லூரி, பு.பிருந்தா-அனலைதீவு சதாசிவ மகா வி., ந.தர்சினி-சுந்தர மூர்த்தி நாயனார் வி.

*பிரிவு-4*

க.கோபால்கிருஷ்ணன்-யாழ்ற்ரன் கல்லூரி, அ.அல்பிரட் நியூட்டன்-புனித அந்தோனியார் கல்லூரி, க.அனுசியா-அனலைதீவு சதாசிவ ம.வி.

*பிரிவு-5*

க.கோகிலா-யாழ்ற்ரன் கல்லூரி, ம.மகின்சியா-புனித அந்தோனியார் கல்லூரி.

**இசை தனி** *பிரிவு-2*

மா.சுதாகரன்-யாழ்ற்றன் கல்லூரி, நெ.ஸ்ரனிஸ்லாஸ் -புனித அந்தோனியார் கல்லூரி, ந.நதுஜா-கரம்பொன் சிறியபுஸ்ப மகளிர் ம.வி.

*பிரிவு-3*

இ.சிவகௌரி-யாழ்ற்றன்கல்லூரி, ம.கெய்ன்சன்-புனித அந்தோனியார் கல்லூரி, யூ.மேரிகயாணா-கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.

*பிரிவு-5*

செ.சுயரூபி-யாழ்ற்ரன் கல்லூரி, அ.அலக்ஸ்-புனித அந்தோனியார் கல்லூரி, சு.நொயிலின்- புனித மரியாள் றோ.க.மகளிர் வி.

*பிரிவு-5*

ம.மேரிஷானி-புனிதஅந்தோனியார் கல்லூரி, ச.கிருஷ்ணவேணி யாழ்ற்ரன் கல்லூரி, த.மனோகரா-கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் க.

**இசை குழு** *பிரிவு-1*

புனித மரியாள் றோ.க.ம.வி., கரம்பொன் சிறிய பு.ம.ம.வி., புனித அந்தோனியார் கல்லூரி.

*பிரிவு-2*

யாழ்ற்ரன் கல்லூரி, கரம்பொன் சிறிய பு.ம.வி., புனித அந்தோனியார் கல்லூரி.

**நடனம் குழு** *பிரிவு-1*

யாழ்ற்ரன் கல்லூரி, கரம் பொன் சிறிய பு.ம.வி., புனிதமரியாள் றோ.க.ம.வி.

**நடனம் தனி** *பிரிவு-1*

ம.காயத்திரி-யாழ்ற்ரன் கல்லூரி.

*பிரிவு-2*

சு.மனோகரி-யாழ்ற்ரன் கல்லூரி, ஸ்ரீ.பாலனி-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., ப.பவிதா-அனலைதீவு சதாசிவ மகா.வி.

*பிரிவு-3*

தி.அம்பிகா-யாழ்ற்ரன் கல்லூரி, நா.நாகசிந்துஜா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., யோ.றோஜினி-கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வி.

*பிரிவு-4*

ஸ்ரீ.லக்சிகா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., இ.பகிப்பிரியா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., சி.சிவசொரூபி-யாழ்ற்ரன் கல்லூரி.

**நாடகம்**

கல்ாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., புனித அந்தோனியார் கல்லூரி, அனலைதீவு சதாசிவ மகா வி.

**வில்லிசை**

புனித அந்தோனியார் கல்லூரி, தம்பாட்டி அ.த.க.பா., நாரந்தனை றோ.க.ம.வி.

**விவாதம்**

காநிதி ஆ.தியாகராசா ம.வி., புனித அந்தோனியார் கல்லூரி.

**தமிழ் அறிவு வினாவிடை**

கலாநிதி ஆ.தியாகராசா ம.வி., புனித அந்தோனியார் கல்லூரி, புனித மரியாள் றோ.க.ம.வி.

## இராசிபலன்

27.06.2008
(ஆனி 13, வெள்ளிக்கிழமை)
ரேவதி முன்னிரவு 10.30 மணிவரை
நவமி முன்னிரவு 10.58 மணிவரை
இராகுகாலம் 10. 25-11.55 மணிவரை
சுபநேரம்-05.55-07.25 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சுபசெலவு, காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம், சயனசுகக்குறைவு. |
| இடபம் | தெய்வ தரிசனம், எடுத்தகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | கடின உழைப்பு, தெய்வதரிசனம், உறவினர் கலந்துரையாடல். |
| கடகம | புதிய முயற்சி, தந்தைவழியுறவு, தெய்வசிந்தை, கட்டுப்பாடு. |
| சிங்கம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், போசனசுகம், பிரயாணம். |
| கன்னி | எடுத்தகாரியம் கைகூடும், செல்வாக்கு, தெய்வதரிசனம். |
| துலாம் | தேகநலன், பகைவர் நேசம், காரிய அனுகூலம், சுபநிகழ்வு. |
| விருச்சிகம் | வியாபார விருத்தி, மனக்கிலேசம், சொத்துப்பிணக்கு, பணக்குறைவு |
| தனுசு | சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம்,கல்வியில் ஆர்வம். |
| மகரம் | உறவினர் உதவி, தனவருவாய், காரிய நன்மை. |
| கும்பம் | கோபப்படுதல், காரிய தடங்கல், பணவிரயம், நிலைமாற்றம். |
| மீனம் | கற்பனை மிகுதி, தெய்வசிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |

வள்வன்

# பாதுகாப்பு அதிகாரிகளைச் சர்வதேச நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் போவதில்லை

## ஐரோப்பிய சமூகத்துக்கு அரசு அறிவிப்பு

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் போலிக் குற்றச்சாட்டுக்களின் காரணமாகச் சர்வதேச நீதிமன்றம் மேற்கொள்ளும் எந்தவொரு விசாரணைகளுக்கும் பாதுகாப்பு அதிகாரிகள் அனுப்பிவைக்கப்பட மாட்டார்கள் என இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய சமூகத்திற்கு அறிவித்துள்ளது.

மேலும், போலியான முறைப்பாடுகளுக்குத் துணை போவதனையும் அரசாங்கம் நிராகரிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூரில் 17 தன்னார்வத் தொண்டு ஊழியர்கள் படுகொலை விசாரணை தொடர்பாகப் பாதுகாப்பு உயர் அதிகாரிகளைச் சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்த பிரான்ஸின் ஏ.சீ. எப். நிறுவனம் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும், இதற்கு ஒரு போதும் இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்காது எனவும் குறிப்பிட்டுள்ளது.

மூதூர் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான மனித உரிமைகள் ஆணையகம் விசாரணைகள் முன்னெடுக்கும் போதும் ஏ.சீ.எப். நிறுவனம் விலகிச் சென்றதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தச் செயற்பாடுகளின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பது குறித்து அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# அம்மை நோயிலும் மாறாத சிரித்த முகம்

## ஐஸ்வர்யா குறித்து அமிதாப் பச்சன்

(மும்பாய்)

பிரபல இந்தி நடிகை ஐஸ்வர்யா ராய் மணல்வாரி அம்மை நோயால் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையிலும் அவர் மாறாத சிரித்து முகத்துடன் அதைத் தாங்கிக் கொள்வதாக மாமனாரான அமிதாப்பச்சன் தெரிவித்துள்ளார்.

ஐஸ்வர்யாவுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கும் போதும் சிரித்த முகத்துடனேயே அதைப் பொறுத்துக் கொண்டிருக்கிறார் என மாமனார் அமிதாப் பச்சன் தனது இணையத் தளத்தில் வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

இதேவேளை ரோபோ படத்தில்



ரஜினிகாந்துடன் நடிப்பதற்கும், மணிரத்னத்தின் அடுத்த படத்தில் கணவர் அபிஷேக் பச்சனுடன் இணைந்து நடிக்கவும் அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று ஐஸ்வர்யா ராயின் முகாமையாளர் ஹர்சிங் தெரிவித்தார். (அ)

## விளையாட்டுவிழா

சிவசக்தி முன்பள்ளியும் அபிராமி முன் பள்ளியும் இணைந்து நடாத்தும் 8 ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை சனிக் கிழமை 8.30 மணிக்கு கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில், ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.தெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை செயலாளர் மே.சாந்த சீலன், சிறப்பு விருந்தினர்களாக கிராமசேவகர் பி.ஆர்.யேசுதாசன்,யாழ். பிராந்திய உள்ளூ ராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஸ் சந்திரன் மற்றும் திருமதி மாலதிதேவி விவே கானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர். (அ)

◆◆◆

(கோப்பாய்)

உரும்பிராய் 'கிட்ஸ்பார்க்' நிறுவனத்தின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக் கிழமை காலை 9 மணியளவில் நடைபெற வுள்ளது.நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ச.சத்தியசீலனும் கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற யாழ். பல்கலைக்கழக தலைமை நூலகர் செல்வி ரோகினி பரராசசிங்கமும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (அ-79)

◆◆◆

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு போட்டி நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நிலைய முன்றலில் தலைவர் மு.விக்னேஸ் வரன் தலைமையில் நடைபெறவுள் ளது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக கோப்பாய், நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குண சேகரமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(அ-79)




## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப் படும் ஆன்மீக சஞ்சிகையான 'ஞானச் சுடர்' ஆனிமாத வெளியீடு இன்று வெள்ளிக் கிழமை வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ கு.தியாகராஜசர்மா, மதிப்பீட்டுரையை க. நவரத்தினம் ஆசிரியர் ஆகியோர் வழங்க வுள்ளனர். (35)

## பரிசளிப்பு விழா

மயிலங்காடு ஸ்ரீமுருகன் கிராம அபிவி ருத்திச்சங்கம் இக் கிராமத்தில் வசிக்கும் மக்களின் பிள்ளைகளது கல்வி முன்னேற் றத்தைப் பாராட்டும் முகமாக நடாத்தப்படும் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மயிலங் காடு ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் கலாபூஷணம் மா.சீவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங் கோவன் , உடுவில் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி ஆகியோரும் கௌரவ விருந் தினர்களாக கிராம சேவையாளர் பி.ஜெயகரன், மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் மு.செல்வஸ்தான் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாட சாலைகளில் தரம்11, தரம்9க்கு "வரலாறு" பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய லமர்வு நாளை சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நிலையத் தில் நடைபெறவுள்ளது. செயலமர்வுக்கு வருகை தரும் ஆசிரியர்கள் வரலாற்று புத்த கத்தையும் எடுத்து வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள் ளார். (ஓ)

## பொன்விழாக் காணும் பருத்தித்துறை இலங்கை வங்கி

(அல்வாய்)

பருத்தித்துறை இலங்கை வங்கியின் பொன்விழா நிகழ்வு வீரவாகு மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை இலங் கை வங்கி கிளை முகாமையாளர் க.ப.ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகா மையாளர் பி.ஏ.அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையை, ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபா்னந்தா, மெதடிஸ்த மிஷன் திருச்சபை வணபிதா என். அருள்நாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக இலங் கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமை யாளர் ந.சிவரட்ணம், மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எம்.ஸ்ரீஸ்கந்தகுமார், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், யாழ். பல்கலைக்கழக முகாமைத் துவ பீட பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், பருத் தித்துறை நகரசபைச் செயலாளர் ஏ. நடராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக இலங் கை வங்கியின் ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், ஓய்வு பெற்ற செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.பால சிங்கம், ஓய்வுபெற்ற பிரதம முகாமையாளர் நடராஜசிங்கம், ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகா மையாளர் எஸ்.விக்கினராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-52,19)

## பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டி

(யாழ்ப்பாணம்)

40 ஆவது சர்வதேச பௌதிகவியல், 10 ஆவது ஆசிய பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டிகளுக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வ ரும் ஜூலை மாதம் 12 ஆம் திக்தி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை க.பொ.த.உயர்தர வகுப்பில் பௌதிகவியலை ஒரு பாடமாகக் கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் உகந்த ஒரு முன்னோடிப் பரீட்சையாகும்.

ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்க ளிற்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் நேரடியாக பரீட்சை மண்டபத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ள னர்.

இப் பரீட்சைகளுக்கான அறிவித்தல்கள் ஏற்கனவே சகல பாடசாலைகளிற்கும் அறி வித்திருந்தும், சரியான தகவல்கள் உயர்தர வகுப்பு மாணவர்களை சென்றடையவில்லை என அறியப்படுவதால், போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவத் தை பூர்த்திசெய்து எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு இப் போட்டிக்கான வட மாகாண இணைப்பாளர் கலாநிதி நா. சிவயோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலதிக தகவல்களை யாழ். பல்கலைக் கழக பௌதிகவியற்றுறைத் தலைவரின் அலு வலகத்தில் நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ பெற்றுக்கொள்ளலாம் எனவும் கலாநிதி சிவயோகன் தெரிவித்துள்ளார். (அ)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற் பொழிவு தொடரில் நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்ற தும் 'இதிகாசங்கள்' தொடரில் சைவப் புலவர் பொன்.சுகந்தன் ஆன்மீகச் சொற்பொழிவாற் றவுள்ளார். (35)

## சுவாமி விவேகானந்தர் பற்றிய கண்காட்சி


கரவெட்டி கட்டைவேலி யார்க்கரு விநாய கர் வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு, பருத்தித் துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிர மத்தால் நடாத்தப்படும் சுவாமி விவேகானந் தர் பற்றிய கண்காட்சியை வித்தியாலய அதிபர் சோ.கருணேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஓ)

## நல்லூர் பிரதேச சபையின் மக்களை நோக்கிய சேவைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினரால் "மக்களை நோக்கிய சேவை" த் திட்டம்-நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலையத்தில் மேற்கொள்ளப்பட வுள்ளது. மக்களை தேடிச் செல்லும் இச் சேவைத் திட்டத்தில் நல்லூர் பிரதேச சபையின் 6ஆம் வட்டாரப் பகுதி மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுப்பதுடன் பிரதேச சபை பற்றிய விழிப் பூட்டல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இத் திட்டத்தில் பிரதேச சபையின் அனைத் துப் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர் களும் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (ஓ-36)



உரும்பிராய் இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசு வேல்நம்பி, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி யாழினி யோகேஸ்வரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

## சமய அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நடாத்தப்படும் தீவகப் பிரதேசத் திற்கான இந்துசமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை வேலணை சரஸ்வதி மகா வித்தி யாலயத்தில் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளதாக இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் அறிவித்துள்ளார். (ஓ)

## பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(அல்வாய்)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத் தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பிரதேச செயலர் பிரிவி லுள்ள 3 பாடசாலைகளுக்கு மட்டுமே பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதன்படி சென்தோமஸ் றோமன் கத் தோலிக்க மகளிர் வித்தியாலய மின்சார இணைப்பு வேலைகளுக்கு 1இலட்சம் ரூபா வும் , வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக் கருவி கொள்வனவு செய் வதற்கு 1 இலட்சம் ரூபாவும்,வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைத் தளபாடக் கொள்வனவிற்கு 50 ஆயிரம் ரூபா வும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-19)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான வரு டாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி தொடர் ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

10 ஆம் திருவிழாவான 9ஆம் திகதி புதன் கிழமை காலை 8மணிக்கு சகஸ்ர சங்காபி ஷேகமும் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் பிற்பகல் 3 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் திருவூஞ்சலும் இடம் பெறும்.

10ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பூங்கா வன உற்சவமும் நடைபெறும். தினமும் காலை உற்சவம் முற்பகல் 10 மணிக்கும் மாலை உற்சவம் பிற்பகல் 3 மணிக்கும் ஆரம் பமாகும். (ஓ)

## விஞ்ஞான வினாவிடைப் போட்டி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

28 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறவிருந்த யாழ்.வலய மட்ட விஞ்ஞான வினா விடைப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

நடைபெறும் திகதி பின்னர் அறியத் தரப்படும் என யாழ்.வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித் துள்ளார். (ஓ)

## கண்காட்சி

(கோப்பாய்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத் தின் கற்றல்,கற்பித்தல் உபகரணக் கண் காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் வித்தியாலய அதிபர் ச. வேல ழகன் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆரம்பப் பிரிவுக் கண்காட்சியை யாழ்.வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசனும் இடைநிலைப் பிரிவுக் கண் காட்சியை நல்லூர் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும் திறந்து வைக்கவுள்ளனர். (அ-79)

## கிராம அறிமுக விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இலங்கை வங்கியின் அனு சரணையுடன் உரும்பிராய் வடக்கு கிராம அறிமுக விழாவும் விளையாட்டுப் போட்டி யும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில்,சனசமூக நிலையப் போஷகர் பொ.சிவஞானம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகா மையாளர் பி.ஏ.அருமைநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். கிராம அறிமுக விழா வினைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டி கள் நடைபெறவுள்ளன. (ஓ)

# நோத்முதல் கோபல்லவா வரை 19

## இலங்கை ஒரு முடிசார் குடியேற்றம்

இலங்கை முடிக்குரிய நாடா னதும் ஆள்பதி நோத் அவர்களுக்கு மேலாகச் சென்னைப் பட்டின வர்த்தகசங்கத்தாருக்கிருந்த அதிகாரம் நீக்கப்பட்டது. முன்னர் ஆள்பதி நோத் அவர்களின் நியமனத்தை அறவே வெறுத்த வர்த்தக சங்கத்தார் அவரை வெளியேற்றப் பல தந்திரோபாயங்களைக் கையாண்டதும் உண்டு. சென்னையாளரைப் பொறுத்த அளவில் அவர்களுக்கு ஆள்பதி மீது தனிப்பட்ட பகைமையும் நிலவியது. வர்த்தக சங்கத்தை சார்ந்த உத்தியோகத்தவர்கள் இலங்கையிற் சேவை செய்ய நேர்ந்தால் அவர்கள் ஆள்பதியிடம் சேவை நலச்சான்று பெற்றால் ஒழிய உத்தியோக உயர்வோ வேதன உயர்வோ பெறவியலாது என இராசப் பிரதிநிதியாய் இருந்த கிளைவ் அவர்கள் சுற்றறிக்கை விட்டிருந்தார் . அதனோடு வர்த்தக சங்கத்தாரின் பொறுப்புக்கள் எவை என்பதை வரையறை செய்து விடுமாறும் ஆள்பதி அவர்கள் தம் மேலதிகாரிகளுக்கு எழுதியுமிருந்தார்.

எனவே தான் இலங்கையின் பரிபாலனத்தில் வர்த்தக சங்கத்தாரின் தொடர்பை அறவே நீக்குதல் வேண்டும் என்றும், அங்ஙனம் நீக்குவதால் இலங்கைக்கும் வர்த்தக சங்கத்தாருக்கும் நன்மையுண்டாகும் என்றும் டண்டாஸ் அவர்கள் தகவுரை எழுதியுமிருந்தார். டண்டாஸ் அவர்கள் மன்னர் பிரானுக்குத் தான் எழுதிய தகவுரையைப் பற்றி வர்த்தக சங்கத்தாருக்கு வெளிப்படையாக அறிவித்தும் இருந்தார். அன்றி இலங்கையின் வர்த்தக அலுவல்கள் இலங்கை அரசாங்கத்துக்குள்ளதிலும் பார்க்க சென்னை வர்த்தக சங்கத்துக்கே சாதகமாக இருப்பதைத் தாம் விரும்புவ்தாகவும் எழுதியிருந்தார்.

### மீள் பார்வை

ஆகவே 18.02.1801 இல் ஆள்பதி நோத் அவர்களுக்கு ஒரு புதிய ஆணைப்பத்திரம் அனுப்பப்பட்டது. அதன் படி இலங்கை வர்த்தக சங்கத்தின் பிடியிலிருந்து நீக்கப்பட்டதென்றும், குடியியற் பாலன, படைப்பாலன, பிற பரிபாலன அலுவல்கள் யாவும் ஆள்பதியவர்களிடமே பொறுப்பாக விடப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

எனவே, 1801 ஆம் ஆண்டு தொடக்கம் ஆள்பதியின் அதிகாரங்கள் வெகு வலுவுள்ளனவாக்கப்பட்டன. அவர் விசுவாசப் பிரமாணம்செய்ய ஏவவும், படைதிரட்டவும், இராணுவ ஆட்சியை பிரகடனப்படுத்தவும், குற்றவாளிகளை விசாரிக்கவும், அவர்களை மன்னித்துவிடவும், சட்டமியற்றவும் , சட்டத்தை நிறைவேற்றவும் வலுவுள்ளவராயினார்.

அவர் நினைத்த மாத்திரத்தில் கொழும்பில் உள்ள அரசாங்க அதிபரை மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள அதிபரைக் கொழும்புக்கு மாற்றவும் மாகாண அதிபரை நீதிபதியாகவும், நீதிபதியை மாகாண அதிபராகவும் மாற்றி நியமிக்க அதிகாரமுள்ளவராயிருந்தார். அக்காலத்தில் இலங்கைக் கரைநாடுகள் பரிபாலனங் காரணமாக எட்டு மாவட்டப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

ஐரோப்பாவிலே யுத்த நெருக்கடிகள் ஓரளவுக்குக் குறைந்தன. மூத்த பிற் பிரித்தானிய முதன் மந்திரிப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். எனவே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்தன. பிரெஞ்சுக்காரர் இந்தியாவில் கண் வைத்திருந்தனர் என்பது அவர்கள் எகிப்து மீது படை எடுத்ததனால் புலனாயிற்று. இந்தியாவில் தாம் அமைக்கக் கனாக்கண்ட பேரரசைக் காப்பாற்றுவதற்கு இலங்கை இன்றியமையாதொன்றென ஆங்கிலேயர் கருதினர்.

எனவே தான் தாங்கள் இலங்கையை நிரந் தரமாக ஆளவேண்டும் என்ற நிபந்தனையை 1802 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட அமியன்ஸ் சமாதானத்தில் பெற்றுக் கொண் டனர். அன்று தொடக்கம் தமக்கு முட்டுக்கட்டை யாயிருந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத் தாரின் தொடர்பையும் நீக்கிவிட்டு இலங்கையை ஒரு குடியேற்ற நாடாகப் பதிந்து கொண்டனர்.



ஆங்கிலேயர் கிழக்கு நாடுகளுக்குப் போய் வரும் போது ஏடின், பம்பாய் , சிங்கப் பூர் எங்ஙனம் அவர்களுக்கு இன்றியமை யாத துறைமுகங்களாயும் ஸ்தானங்களாயும் இருந்தனவோ, அவற்றிலும் பார்க்கப் பிரதானமாய் இலங்கையில் உள்ள திருகோண மலைத் துறைமுகம் இருக்கும் என்றும் , இலங்கையைத் ஸ்தானமாகக் கொண்டு தாங்கள் தங்கள் பிரித்தானியப் பேரரசை வலுப்படுத்தலாம் என்றும் எண்ணினார்கள்.

**க.சி.குலரத்தினம்**

எனவே அவர்கள் 1.2.1802 தொடக்கம் இலங்கை யைக் குடியேற்ற நாடாகப் பதிந்து அன்று தொடக்கம் 3.2.1948 இன் நள்ளிரவு வரை 146 ஆண்டுகாலம் முடிசார் குடியேற்றமாக அரசாண்டார்கள். (தொடரும்)

# ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமாவுக்கு பில் கிளின்டன் ஆதரவு தெரிவிப்பு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன், முதற் தடவையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் பாரக் ஒபாமாவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.


கிளின்டனின் பாரியாரான ஹிலாரி கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் தொடர்பான ஜனநாயகக் கட்சியின் போட்டியில் பாரக் ஒபாமாவுக்கு பெரும் சவாலாக விளங்கிய சமயத்தில், தனது பிரசார நடவடிக்கைகளின் போது ஒபாமாவைத் தாக்கி உரையாற்றுவதை கிளின்டன் வாடிக்கையாகக் கொண்டிருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிய மனம் பெறுவதற்கு தேவையான பிரதிநிதிகளை பெறாதநிலையில் வேட்பாளர் போட்டியிலிருந்து ஒதுங்கிய ஹிலாரி கடந்த வெள்ளிக்கிழமை ஒபாமாவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டார். அச் சமயம் கிளின்டன் ஐரோப்பாவிற்கு சென்றிருந்ததால் அக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் பாரக் ஒபாமா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான அனைத்தையும் முடிந்தவரை செய்யத் தான் தயாராகவுள்ளதாக கிளின்டன் தனது பேச்சாளரான மத் மக்கென்னா மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

கிளின்டனின் இந்த ஆதரவு பிரகடனத்திற்கு ஒபாமாவின் தரப்பினர் வரவேற்பளித்துள்ளனர். ஜனநாயக கட்சியின் கூட்டிணைப்பானது இவ் வருடத்தில் மாற்றமொன்றைக் கொண்டு வருவதற்கான அதிசக்தி வாய்ந்த உந்து சக்தியாக விளங்கும் என ஒபாமாவின் பிரசார அலுவலகர் தெரிவித்தார். (அ)

### உலக தரிசனம்

# ஓய்வுபெறுகிறார் பில்கேட்ஸ்



பல்லாண்டுகளாக உலகின் முதலாவது பணக்காரராக திகழ்ந்து வரும் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் ஸ்தாபக தலைவருமான பில் கேட்ஸ் அப் பதவியி லிருந்து இன்று ஓய்வுபெறுகிறார்.

கடந்த 33 வருடங்களாக மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் நிறைவேற்று தலைவராக இருந்து வரும் பில்கேட்ஸ் தனது ஓய்வின் பின்னர், அவரால் ஸ்தாபிக்கப்பட்ட பில் என்ட் மலின்டா பவுண்டேஷன் எனப்படும் சமூக சேவை அமைப்பில் அதிக நேரத்தை செலவிடுவதற்கு தீர்மானித்துள்ளார். இந்நிலையில் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின். நிறைவேற்று தலைவர் பதவி ஸ்டீவ் போல்மருக்கு செல்கிறது. (ச)

# முகாபேவின் சேர் பட்டம் மீளப்பெறப்பட்டமையை பிரி.வெளியுறவு அமைச்சு உறுதிசெய்துள்ளது



சிம்பாப்வே அதிபர் முகாபேவுக்கு 1994 ஆம் ஆண்டில் எலிசபெத் மகாராணியால் வழங்கப்பட்ட சேர் பட்டம் மீளப்பெறப்பட்டதாக பிரித்தானிய வெளியுறவு அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

அவரது நடவடிக்கைகள், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களை மதிப்பதாக இல்லை என்று கூறியே அந்த பட்டம் திரும்பப் பெறப்பட்டது.

இதற்கிடையே, அதிபர் றொபேட் முகாபேயை தனிமைப்படுத்துமாறு சர்வதேசக் குரல்கள் அதிகரித்துவரும் நிலையில் சிம்பாப்வேயில் ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்ப்பதற்கான முயற்சிகளில் தென் ஆபிரிக்க பிராந்திய தலைவர்களின் அவசரகால மாநாடு ஈடுபட்டுள்ளது.

இந்த உச்சிமாநாட்டில் ஸ்வாசிலாந்து, தான்சானியா மற்றும் அங்கோலாவின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். ஆனால் தென்னாபிரிக்கா அதில் பங்கேற்கவில்லை. தென்னாபிரிக்க அதிபர் தபோ எம்பெகி பங்கேற்பார் என்று முன்பு சமிக்ஞைகள் வெளியிடப்பட்டன.


இந்த மாநாட்டில் எம்பெகியின் கருத்துக்கள் கணக்கில் கொள்ளப்படும் என்று அங்கோலாவின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (அ)

# சல்மான் ருஷ்டிக்கு "சேர் பட்டம்" எலிசபெத் மகாராணி வழங்கினார்

சர்ச்சைக்குரிய பிரிட்டிஷ் நூலாசிரியர் சல்மான் ருஷ்டி இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்புக்காக, அவருக்கு 'சேர்' பட்டத்தை எலிசபெத் மகாராணியார் வழங்கினார். அவருக்கு சேர் பட்டம் வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட உடனேயே அதற்கு முஸ்லிம் நாடுகளில் கடும் எதிர்ப்புகள் எழுந்தன.

ஈரானின் மறைந்த மதத் தலைவர் அயத்துல்லா கொமெனி, ருஷ்டி கொல்லப்பட வேண்டும் என்று வழங்கிய 'பாத்வாக்கு' இடையே கடந்த 18 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்.

சாத்தானின் வேதங்கள் என்ற ஒரு நூலை எழுதியதன் பிறகு அவருக்கு எதிராக 'பாத்வா' பிறப்பிக்கப்பட்டது.



இந்தப் புத்தகம் தமது மத நம்பிக்கையை நிந்தனை செய்வதாக முஸ் லிம்கள் பலர் கருதுகின்றனர். (அ)

# ஒரே சமயத்தில் 3 குழந்தைகளை பிரசவித்து அவுஸ்.பாட்டி சாதனை

(சிட்னி)

அவுஸ்திரேலிய பாட்டியொருவர் இயற்கையான முறையில் கருத்தரித்து, ஒரே சமயத்தில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்து சாதனை படைத்துள்ளார்.

எதிர்வரும் வாரம் தனது 47 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள ஜனெல்லி பெரி என்ற இப்பெண்மணி, பிரிஸ்பேன் நகரிலுள்ள 'மட்டர் மதர்ஸ்' மருத்துவம னையில் ஒரே சமயத்தில் மூன்று ஆண் குழந்தைகளை பிரசவித்து மருத்துவ உலகை அதிசயிக்க வைத்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.புதிதாக பிறந்த இக் குழந்தைகளுக்கு கூப்பர், கைல், ஜோர்டன் எனப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

ஜனெல்லி பெரிக்கு முதல் திருமணத்தின் மூலம் 4 பிள்ளைகளும் இரண்டாவது திருமணத்தின் மூலம் 4 வயதுள்ள ரெபேக்கா என்ற மகளும் உள்ளனர்.

இப் பிரசவம் குறித்து இரு பேரப்பிள்ளைகளுக்கு பாட்டியான ஜனெல்லி பெரி விபரிக்கையில், தானும் தனது இரண்டாவது கணவரான றொபேட்டும் புதிதாக குழந்தையொன்றை பெற்றுக்கொள்ளும் முகமாக கடந்த இரு வருடகாலமாக முயற்சித்ததாகவும் ஆனால், தான் இயற்கையான முறையில் கர்ப்பமடைவதற்கு 5 சதவீதமே வாய்ப்பு இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் கூறினார்.

'எனது வாழ்வில் புதிதாக ஒரு பிரசவம் என்பது ஒருபோதும் நிகழாது என்றே நினைத்திருந்தேன். கடந்த நவம்பர் மாதம் எனது சிறிய மகள் ரெபேக்கா, தனக்கு 3 சகோதரர்கள் வேண்டும் என விளையாட்டாக கூறிய போது, அது சாத்தியமற்ற ஒன்றாகவே எனக்குத் தோன்றியது. ஆனால், அடுத்த மாதமே நான் கர்ப்பமடைந்துள்ளதை கண்டறிந்தேன்' என ஜனெல்லி பெரி கூறினார்.இந்நிலையில் 'கிரேன்' வாகனத்தை இயக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஜனெல்லி பெரியின் கணவர், மூன்று குழந்தைகளையும் பராமரிக்க மனைவிக்கு உதவும் முகமாக ஒரு வருட கால விடுமுறை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார். (அ)

# 80 ஆண்டுகளுக்கு முந்திய ஓவியம் ஏலத்தில் சாதனை படைத்தது



பிரபல ஓவியர் கிளாட் மொனெட்டால் 1919 ஆம் ஆண்டுவரையப்பட்ட 'லீபேஸின் அக்ஸ் நிம்பியஸ்' என்ற ஓவியமானது லண்டனில் இடம்பெற்ற ஏல விற்பனையில் 40.9 மில்லியன் ஸ்ரேலிங் பவுனுக்கு விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

இதன்மூலம் ஏல விற்பனையொன்றில் அதிகளவு விலைக்கு விற்பனையான கலைப் படைப்பு என்ற பெருமையை இந்த ஓவியம் பெறுகிறது. லண்டன் கிரிஸ்ரி ஏல விற்பனை நிலையத்தில் இடம்பெற்ற இந்த ஏல விற்பனையின்போது மேற்படி ஓவியத்துக்கு 24 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் வரையான விலையே ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதாக கூறப்பட்டது.

பிரான்ஸில் வைத்து வரையப்பட்ட இந்த ஓவியமானது கடந்த 80 ஆண்டுகளில் ஒரு தடவை மட்டுமே பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 6

பகுதி –II

நேரம் – 1 மணி 15 நிமிடம்

செல்வி தே.தேவரத்தினம்
யாழ்ப்பாணக் கல்லூரி.

**(01) பின்வரும் விவரணத்தை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**நான் உயர்ந்த மலையில் பிறந்தேன். செங்குத்தான மலையில் இருந்து குதித்து விழும்போது என்னை நீர்வீழ்ச்சி என்று அழைப்பர். நான் மின்சாரத்தை மக்களுக்குக் கொடுக்கின்றேன். சமவெளிப் பகுதியில் தவழ்ந்து தவழ்ந்து வருகிறேன். என் அருகில் உள்ள தாவரங்களுக்கு பசுமையையும், செழிப்பையும் தருகிறேன். மலர்ப் பொழிலை எழிலாக்கி வருகின்றேன். நான் அல்லும் பகலும் அலைந்து வருகிறேன். உங்களை மகிழ்வித்த நான் ஆழி இறைவனைக் காணச் செல்கிறேன்.**

1) இப்பந்தி எதன் கூற்றாக அமைகின்றது?
2) செங்குத்தான மலையில் குதித்து விழும் நீர் பெறும் பெயர் என்ன?
3) பந்தியிலிருந்து தன்மை ஒருமைப் பெயர் ஒன்று தருக?
4)இது எப்பகுதியில் தவழ்ந்து தவழ்ந்து வருகிறது?
5)உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர் ஒன்று தருக?
6)இப்பந்தியிலுள்ள இணைமொழிச் சொல் ஒன்று எழுதுக?
7)இது மக்களுக்குக் கொடுப்பது எது?
8)இப் பந்தியிலுள்ள வினையெச்சம் ஒன்று எழுதுக?
9)இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அடைமொழிச் சொல் ஒன்று தருக?
10) பந்தியிலுள்ள பூங்கா என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

**(02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

1) வீசிய/மரங்கள்/நேற்று/ பெருங்காற்றினால்/ விழுந்தன/ முறிந்து
2) தண்டனை /நேற்றே/ இருந்தால்/ உண்மையைச் /இன்று/ சொல்லி /கிடைத்திருக்காது

**(03) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**




**(04)பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**


1) Please give me a pencil
2) I am reading a book
3) Clap your hands

**(05)பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

1)ஒற்றைக் காலில் நிற்றல் :- 2) நாக்குப் புரளுதல்:-

**(06)பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக**

முடிதும்பை, தொட்டாற்சுருங்கி, ஊமத்தை, சுண்டங்கத்தரி, வேம்பு, குப்பைமேனி, கார்த்திகைப்பூச்செடி



........ ........ ........ ........

**(07) பின்வரும் பூச்சிகளின் பெயர்களை எழுதுக.**

எறும்பு, ஈசல், கரப்பான் , பழஈ, தேனீ, குளவி, தும்பி, அந்துப்பூச்சி




........ ........ ........ ........

**(08) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) நாம் முகம் பார்க்கப் பயன்படுத்தும் கண்ணாடியின் திருத்தமான விஞ்ஞானப் பெயர்;
1.குவிவாடி 2.குழிவாடி 3.தளவாடி 4.கண்ணாடி


2) மனித உடலில் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் அங்கம்
1.இதயம் 2.கண் 3.வாய் 4.காது

3) கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளில் மின்காந்தத்தை உருவாக்க முடியாத அமைப்பு




4) "முலிந்த", "சபர" எனும் சொற்கள் எதனைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன?
1.பழங்குடியினரை 2.இரத்தினபுரிப்பகுதியை
3.வேடுவத் தலைவனை 4வேடுவர்களது வழிபாட்டை


5) பின்வரும் உடுத்தொகுதியில் வேட்டைக்காரனைக் குறிப்பது?



6) தலைகீழாகத் தொங்குவது
1.வௌவால் 2.இளநீர் 3.ஆந்தை 4.புறா

7) புகையிரதம் புறப்படுவதற்குக் காட்டப்படும் கொடி?
1.சிவப்பு 2.நீலம் 3.பச்சை 4.கறுப்பு

8) பின்வரும் விளையாட்டுக்களில் எதில் ஒரு குழுவில் 6 பேர் விளையாடுவார்கள்?




9) இலங்கையின் தேசியப் பூங்கா அமைந்துள்ள மாகாணம்?
1.வடமாகாணம் 2.மேல் மாகாணம் 3.மத்திய மாகாணம் 4.தென் மாகாணம்

10) எரிதலின் போது விடுவிக்கப்படுவது
1.ஒட்சிசன் 2.காபனீரொட்சைட் 3.தூசு துணிக்கை 4. புகை

11) உணவினைக் கொறித்து உண்ணும் பிராணி
1.பூனை 2.மூஞ்சூறு 3.மான் 4.கோழி

12) தேசப்படங்களில் பிரதான வீதியை காட்டப்பயன்படுத்தும் நிறம் எது?
1.சிவப்பு 2.பச்சை 3.நீலம் 4.கறுப்பு

13)பலகையில் குழி குடைவதற்கு உதவும் உபகரணத்தொகுதி எது?



14) வேரில் உணவு சேமிக்கும் தாவரம் எது?
1.வெங்காயம் 2.தக்காளி 3.இஞ்சி 4.சோளம்

15) பல்லாங்குழி விளையாட பயன்படும் வித்து எது?
1.நெல் 2.பூசணிவித்து 3.மாம்வித்து 4.புளியம்வித்து

16) பேரூந்து ஒன்றின் முன்பக்க வலப்பக்க மூலையின் வெளிப்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடி பயன்படுவது;
1.சாரதி தனது முகத்தைப் பார்க்க 2.சாரதி பேரூந்தினுள் இருக்கும் பயணிகளைப் பார்க்க
3.சாரதி பின்னால் வரும் வாகனங்களைப் பார்க்க 4.பேருந்தை அழகுபடுத்துவதற்காக

17) மரம் அரிய உதவும் வாளொன்றினைக் கூராக்க உதவுவது?
1.சாணைக்கல் 2.அரம் 3. இடுக்கி 4. சீவுளி

18) மரத்தின் இலைகளைக் கொண்டு கூடு அமைக்கும் பிராணி எது?
1.தேனீ 2.சிட்டுக்குருவி 3.செவ்வெறும்பு(முசுறு) 4.காகம்

19) ஆபத்து வேளைகளில் தன் வாலை தானே துண்டித்துவிட்டு தப்பித்துக்கொள்ளும் பிராணி?
1.ஓணான் 2.பல்லி 3.அரணை 4.பாம்பு


20) பச்சை நிறத்தையும், சிவப்பு நிறத்தையும் சமவளவு சேர்க்கும் போது உண்டாகும் நிறம்?
1.கபிலம் கருநீலம் 3.கறுப்பு 4.பிரகாசமான பச்சை

21) போர்த்துக்கேயரை அடுத்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆண்டவர்?
1.ஒல்லாந்தர் 2.பிரித்தானியர் 3.பிரான்சியர் 4.இந்தியர்

22) உடலில் பட்டால் கடியையும் தோலில் தடிப்பையும் உண்டாக்கும் தாவர இலை
1.ஆடாதோடை 2.கற்பூரவள்ளி 3.மரமுந்திரிகை 4.காஞ்சோண்டி

23) கழிவுக் கடதாசிகள், கழிவுத்துணிகள் இவற்றைப் பயன்படுத்தி ஒட்டு வேலை செய்யும் முறை?
1.பற்றிக் வேலை 2.மொனோ ஆக்க வேலை 3.கொலாஜ்வேலை 4.ஸ்கிறீன் அச்சுவேலை

24) பாத்திரமொன்றில் தேங்காயெண்ணெயும் மண்ணெண்ணையையும் விட்டால் அவற்றின் சரியான நிலையைக் காட்டுவது.




25) வாகனங்களின் ரயர்களில் அழகான கோலங்கள் இருப்பதன் காரணம்?
1.அழகிற்காக 2.மணலில் கோலம் பதிக்க
3.வழுக்காமல் இருக்க 4.விரைவாக உருளுவதற்கு

**(09) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.**

| விளையாட்டுக்கள் | விரும்புபவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உதைபந்து | 25 |
| துடுப்பாட்டம் | 30 |
| கொக்கி | 15 |
| கூடைப்பந்து | 30 |
| கரப்பந்து | 45 |

1)தரப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப நிரல் வரைபை வரைந்து காட்டுக.




2) குறைந்த எண்ணிக்கையினர் விளையாடும் விளையாட்டு எது?
3) சம எண்ணிக்கையினர் விளையாடும் விளையாட்டுக்கள் எவை?
4) உதைபந்து விளையாடும் வீரனுக்குரிய பெனியன் ஒன்றின் விலை ரூபா 150 எனின் அவ்விளையாட்டுவீரர்களுக்கான பெனியனின் மொத்த விலை யாது?
5) ஐந்து விளையாட்டிலும் ஈடுபடும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

**(10) பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1) ஒருவர் ஒரு மணித்தியாலத்தில் 26 cm நீளமான கயிற்றைத் திரிப்பார். மு.ப. 8.00 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை அவர் கயிறு திரித்தாராயின் எத்தனை m நீளமான கயிற்றை திரித்தார்?

........................................

2) ஒரு நீர்த்தொட்டியில் 300 லீற்றர் நீர் உள்ளது. 5 நிமிடங்களில் அத் தொட்டியிலிருந்து 8 லீற்றர் நீர் வெளியேறும். 30 நிமிடங்களின் பின்னர் அத்தொட்டியில் எஞ்சியிருக்கும் நீரின் அளவு யாது?

........................................

3) சிந்துஜன் தன்னிலும் விட 1/3 பங்கு நிறையுடைய பொதி யொன்றைத் தூக்கி வந்தான் அப்பொதியின் நிறை 9 kg 850g ஆகும். எனவே சிந்துஜனின் நிறை யாது?


........................................

4) மைதானம் ஒன்றின் நடுவில் கொடிக்கம்பம் உள்ள இடத்திலிருந்து புறப்பட்ட கமல் வடக்குத் திசை நோக்கி 200m தூரம் நடந்து சென்று பின் அங்கிருந்து இடதுபுறம் திரும்பி 100 m நடந்து சென்று மீண்டும் இடது புறம் திரும்பி 200m தூரம் நடந்து சென்று ஓரிடத்தில் நின்றான். இப்பொழுது கமலிற்கு எத்திசையில் கொடிக்கம்பம் உள்ளது?


........................................

5) ஐந்து வருடங்களுக்கு முன்னர் என்னுடைய வயது 23 வருடமாகும் எனது தந்தையின் வயது என்னுடைய வயதைப் போன்று இரண்டு மடங்கிலும் 5 வருடங்கள் கூடியது. தற்போது எனது தந்தையின் வயது யாது? ........................................

6) படுக்கை விரிப்பு ஒன்றின் விலை ரூபா. 245.00 ஆகும். இவ்வாறான 10 படுக்கை விரிப்புக்களை வாங்கிய மாதவன் ரூபா.2600ஐக் கொடுத்தான். இதன்படி ஒரு படுக்கை விரிப்பின் விலை எவ்வளவு ரூபாவால் அதிகரித்துள்ளது? ........................................

7)  அருகே காட்டப்பட்டுள்ள உருக்கள் யாவற்றையும் இணைப்பதன் மூலம் பெறத்தக்க உருவின் கணிதப் பெயர் என்ன?

8) வட்டமொன்றின் சுற்றளவு 88m ஆகும். இவ்வட்டத்தைச் சுற்றி சம இடைவெளிகளில் 22 கம்பங்கள் நடப்பட்டன. இரண்டு கம்பங்களுக்கிடையேயான தூரத்தைக் காண்க.

9)  8cm நீளமும் 2cm அகலமும் உள்ள ஒரே அளவான 7 கடதாசிக் கீலங்கள் உருவில் காட்டியவாறு தகடொன்றில் ஒட்டப்பட்டுள்ளது. இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

10) 150ml கொள்ளக்கூடிய சிறிய கோப்பையினால் 20 தடவைகள் பாத்திரமொன்றில் நீர் ஊற்றப்பட்டது. பாத்திரத்தில் ஊற்றப்பட்ட நீரின் அளவை லீற்றரில் தருக.

........................................

11) ஒரு நோயாளிக்கு ஒரு தடவை 2 வீதம் ஒரு நாளைக்கு மூன்று தடவை போடுதவற்கு 30 மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

........................................

**(11) பின்வரும் பந்தியை வாசிக்கவும்.**

**"மாலை நேரம் முரளியும் நண்பர்களும் இன்று என்ன விளையாட்டை விளையாடலாம் என்றுயோசித்துக் கொண்டிருந்தனர். இறுதியில் முரளிக்குக் கண்களைக் கட்டிவிட்டு தங்களைத் தேடிப் பிடிக்கும்படி கூறினார்கள். அவ்வாறே முரளி கைகளை நீட்டியபடி அவர்களைத் தேடிக்கொண்டிருந்தான். அப்பொழுது............... "**

**இதனைத் தொடர்ந்து என்ன நடந்திருக்குமென்று நீங்கள் கருதும் விடயங்களை வைத்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாவது இருக்க வேண்டும்.**

சமைக்கப் படைக்கத் தெரியாமல் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும்.
–தமிழ்ப் பழமொழி

வலம்புரி

## பிரதமர் மன்மோகன் சிங் அரசு

ஈழத்தமிழர்களுக்குப் பெருந்துரோகம் இழைத்ததில் பிரதமர் மன்மோகன் சிங்கின் அரசிற்கு கூடிய பங்களிப்பு உண்டு.

தமிழகத்தில் இருக்கும் கலைஞர் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் ஆட்சி செய்யும் பிரதமர் மன்மோகன் சிங், பொருளாதாரத்துறையில் சிறந்த ஒருவராக இருப்பினும் அண்டை நாட்டில் இடம்பெறும் பிரச்சினைகளைக் கையாள்வதில் அவரிடம் வல்லமை இல்லை என்றே கூறவேண்டும்.

வல்லாதிக்கம் மிக்க இந்தியா சிறிய நாடான இலங்கைக்கு பயம் கொள்வது மிகப் பெரும் மடமைத்தனமும் பிரதமர் மன்மோகன் சிங்கின் பலவீனமும் ஆகும்.

இலங்கையின் அண்டை நாடாக இந்தியாவைத் தவிர வேறுஓர் நாடு இருந்திருக்குமாயின் இனப்பிரச்சினை எப்போதோ முற்றுப்பெற்றிருக்கும்.

ஆனால் இந்தியா அண்டைநாடாக இருந்ததனால் ஈழத்தமிழர்கள் பெரும் அசௌகரியங்களையும் தீராத துன்பங்களையும் சந்தித்து வருவதுடன் இந்தியா உதவும் என்ற நம்பிக்கையையும் கொண்டுள்ளனர்.

இந்த நம்பிக்கை வீணானதென்பது உண்மையாயினும் தமிழ்ப்பிறப்புகள் தமிழகத்தில் இருப்பதால் அவர்கள் ஒருபோதும் கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை நீள்கிறது.

ஆனால் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட காங்கிரஸ்காரர் ஒருபோதும் ஈழத்தமிழர்களுக்கு உதவ மாட்டார்கள் என்பதும், அவர்கள் உபத்திரமாகவே அமைவார்கள் என்பதும் நிறுத்திட்டமான உண்மை.

இலங்கையில் நடைபெறும் சார்க் மாநாட்டிற்கு வருகை தரவுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இன்னலுறும் தமிழ் மக்களுக்கு வழங்கப்போகும் ஆறுதல் என்ன?

ராஜீவ்காந்தியுடன் ஜே.ஆர்.செய்த ஒப்பந்தம் முற்றுப்பெற்றுவிட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் நீதிபரிபாலனத்தால் பிரிக்கப்பட்டு விட்டது.

அதற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற சாதாரணமான வார்த்தையுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகப்பெரும் சர்ச்சைக்குரிய விடயத்திலிருந்து விலகிக் கொண்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து வந்தவர்களும் வடக்கு கிழக்கு இணைந்திருப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என வெறும்வாய் சப்பிவிட்டுச் சென்றுள்ளனர்.

இவையெல்லாம் இந்தியா ஈழத்தமிழருக்கு இழைக்கும் மிகப்பெரும் கொடூரத்தனமாகும்.

# பொலிஸ் நிலையங்களில் சித்திரவதைகள் —சாதாரண நிகழ்வாக மாறிவிட்டன—

### ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் நிலையங்களில் சித்திரவதைகள் இடம் பெறுவது சாதாரணமான நிகழ்வாக மாறியிருப்பதுடன் அவற்றை தடுப்பதற்கு எந்த அரசியல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு புதன்கிழமை அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெறும் மோதல்களில் ஒரு பகுதியாகவும் சித்திரவதைகள் இடம்பெறுவதுடன் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளின் போதும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதாக கொங்கொங்கை தளமாகக் கொண்டு இயங்கும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படை அற்றவை என இலங்கை அரசாங்கம் கூறுகிறது. பொலிஸ் சித்தரவதைகள் தொடர்பாக ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்த போதும் 3 முறைப்பாடுகளுக்கு எதிராகவே சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு கூறுகிறது.

சிறிய குற்றச்செயல்களாக இருந்தாலும் சரி பாரிய குற்றச்செயல்கள் தொடர்பாக அவசர கால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தாலும் சரி இலங் கையில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் சித்திரவதைகள் இடம்பெறுவது வாழ்க்கையில் சராசரியான நிகழ்வாகவுள்ளது என ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருக்கும் காலப்பகுதியில் கடுமையாக தாக்கப்பட்டதாக தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அச்சக உரிமையாளர் ஜெசிகரன் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்தில் கண்ணீருடன் கூறியிருந்த நிலையிலேயே ஆசிய மனித உரிமைகள் அமைப்பு இவ்வாறான தொரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. (அ)

# கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகள் 3,606 பேருக்கு இன்று ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

2005/2007 ஆம் கல்வியாண்டில் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரிய முன்பயிற்சி டிப்ளோமா நெறியை பூர்த்தி செய்து கொண்ட 3 ,606 டிப் ளோமாதாரிகளுக்கும் இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நாடு பூராகவுமுள்ள 17 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் 23 பாடநெறிகளைப் பயின்றுகற்கை நெறியை பூர்த்தி செய்து கொண்டவர்களில் 317 டிப்ளோமாதாரிகள் தேசிய பாடசாலைகளுக்கும் 2 , 289 பேர் மாகாண பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களாக நியமனம் செய்யப் படவுள்ளனர்.

இந்நியமனங்களின் போது கிழக்கு மாகாண தமிழ் மொழிமூல தேசிய பாடசாலைகளில் 19 பேரும் மாகாணப் பாடசாலைகளில் 261 பேரும் நியமனம் செய்யப்படவுள்ளனர். இதே போல் வட மாகாண தேசிய பாடசாலைகளில் 24 பேரும் மாகாண பாடசாலைகளில் 256 பேரும் நியமனம் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்நியமனங்களின் போது இம்முறை மேல் மாகாணத்திலுள்ள தமிழ் மொழிமூல மாகாண மட்டப் பாடசாலைகளில் எந்த வொரு நியமனமும் வழங்கப்படவில்லை . இருந்த போதிலும் மேல் மாகாண தமிழ் மொழி மூல தேசிய பாடசாலைகளில் தமிழ் மொழி மூல டிப்ளோமாதாரிகள் 17 பேர் நியமனம் செய்யப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆசிரிய மாணவர்களின் ஆங்கிலப் பயிற்சி நெறியினைத் தொடர நடவடிக்கை எடுக்கவும்

### ஜனாதிபதிக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி கடிதம்

மகரகம களுத்துறை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளில் பயின்ற ஆங்கில ஆசிரிய மாணவர்களின் பயிற்சி நெறி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப்பயிற்சி நெறியினைத் தொடர்வதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந் தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ் வாறு கோரிக்கை விடுத்துள் ளார்.

இந்தக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மகரகம ,களுத்துறை பஸ்துன்ரட்ட ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் தமிழ், சிங்கள ,முஸ்லிம்சமூகங்களைச் சேர்ந்த ஆங்கில பிரிவு பயிற்சி நெறி மேற்கொள்ளும் 400ற்கும் மேற்பட்ட ஆசிரியர் மாணவர்களின் ஆசிரிய பயிற்சி நெறி எவ்வித முன்னறி வித்தலு மின்றி கடந்த 20ஆம் திகதி முதல் இடை நிறுத்தப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளரால் திடீரென அறிவித்தல் வழங்கப் பட்டுள்ளது.

மகரகம ஆசிரியர் பயிற்சிக்கல் லூரியின் அதிபர் மற்றும் பஸ்துன் ரட்ட கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி ஆகியோருக்கு கல்வி அமைச்சின் செய லாளரால் கடந்த 19ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் மூலம் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள் ளதனை தங்கள் கவனத்திற்கு கொணர்கின் றேன்.

இவர்களுள் ஏற்கனவே நாட்டில் நிலவும் நெருக்கடி மற்றும் தொடர் துன்பங்களுக்கு மத்தியில் மாணவர்களுக்கு கல்விச்சேவையாற்றி வரும் சுமார் 150 வடக்கு கிழக்கு ஆசிரிய மாணவர்களும் அடங்குகின்றார்கள். இவர்கள் பயிற்சி நெறியினை மேற்கொள்ளவென மேற்படி கல் லூரிகளிற்கு சமீபமான தங்குமிடங்களினை தமது சொந்த செலவில் வாடகைக் குப்பெற்று தமது பயிற்சிக்கல்வினை மேற்கொண்டு வந்தார்கள். கல்விய மைச்சின் இத்திடீர் இடைநிறுத்த அறிவிப்பு காரணமாக பலர் தாம் செலுத்தியிருந்த வாடகை முற்பணம் போன்றவற்றினை மீளப்பெற முடியாத அவல நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். எனவே மேற்படி சகல சமூகங்களையினையும் சேர்ந்த ஆசிரிய மாணவர்களின் ஆங்கில பிரிவு பயிற்சி நெறியினை இடை நிறுத்தாமலும் குறிப்பாக வடக்குகிழக்கு மாகாண தமிழ் ஆசிரிய மாணவர்களின் இப் பயிற்சி நெறியானது தங்கு தடை யின்றி தொடர பொருத்தமான மாற்று வழியொன்றினை விரைவாக கண்ட றிந்து அமுல்படுத்தி உரிய நடவடிக்கை யினை மேற்கொண்டு உதவுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள் கின்றேன். (அ)

# வெள்ளி நற்சிந்தனை 26

## பக்தியின் மொழி தமிழ்

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பக்தி நெறிநிற்போரை பற்றி பலர் பலவாறு பேசுவர். நாள்தோறும் வழி பாடு செய்யும் மனவிருப்புடையோரைக் கண்டு பிறர் கேலி செய்வதும் உண்டு. பக்தி நெறி என்பது ஒரு வரையறையான வாழ்க்கைக்கு வழிகாட்டுவது. மனித னுக்குப் பெற்றோரும் ஆசிரியரும் சிறந்த வழிகாட்டிகளாவர். அவர்களுடைய சொற் கேட்டு நடப்பதே நல்லது. சிவனுடைய தோற் றத்தைக் கண்டு சம்பந்தர் சிந்திக்கின் றார்.

திருச்சாய்க்காடு என்னும் தலத்திலே உறைகின்ற இறைவனின் புதுமையான தோற்றம் கண்டு அவருடைய உள்ளத் தில் புதிய கருத்து ஒன்று தோன்றியது. அழகிய ஒரு பெண்ணைத் தன்னுடலின் சரிபாதியாகக் கொண்டிருக்கும் இறை வனைக் சுவைமயாக நோக்குகிறார். கோங்கு போன்ற குவிந்த முலைகளையுடைய வள். வளமான மூங்கில் போன்ற தோளுடையவள். கொடியிடை கொண்ட வள் இத்தகைய பெண்ணொருத்தியைப் பாகமாகக் கொண்டவன் மனத்திலே மகிழ்ச்சிக் குக் குறைவேயில்லை. மேலும் பரவிய சடையிலே இளமதியைத் தாங்கி நிற்கி றான். இந்தக் கோல அழகு எங்குமே காணமுடியாத ஒரு புதுமையான அழகு. எனவே அதைப் பாடலில் பதிவு செய்துள் ளார்.

குடும்ப நிலையில் ஆணும் பெண் ணும் ஒன்றாய் இணைந்து வாழும் முறைமை நீண்ட காலமாகத் தொடர்கிறது. இள வல் சம்பந்தர் உள்ளத்தில் இறை வனின் இணைந்த தோற்றம் ஒரு செய் தியைச் சொல்வதாகத் தோன்றுகிறது. "பாங் கென வைத்து உகந்தான்" என இறைவனின் உள்ளத்தை அறிந்தவர் போலச் சம்பந்தர் பாடியுள்ளது நோக்குதற்குரியது. தன்னோடு வாழ்வில் இணைந்த பெண்ணை ஆண் எவ்வாறு பேணி வாழவேண்டும் என்பதையே இறைவன் தோற்றம் உணர்த்துவதாகச் சம்பந்தர் விளக்குகின்றார். உகத்தல் என்னும் சொல் மிக அருமையான ஒரு பொருளைத்தருவது. ஒன்றை உள்ளத்திலே திரும்பத்திரும்ப நினைத்து வாழ்வதே மகிழ்வைத்தரும். அதனால் உள்ளத்திலே மகிழ்ச்சிபரவும் சம்பந்தரின் பார்வையில் இறைவன் அத்தகையதொரு மகிழ்வுடனிருப்பதாகவே தோன்றுகிறது. மகிழ்வாக இருப்பவருடைய மகிழ்ச்சிக்குரிய காரணத்தை அறிந்து கொண்டால் நாமும் அவரைப் பின் பற்றி மகிழ்வாக இருக்கலாம். இறைவன் மகிழ்வாக இருப்பவன் அவனுடைய நிழலிலே இருந்தால் மகிழ்வாக இருக்கலாம் எனவே கோவிற் சூழ லிலே குடியிருப்பவர்; குடும்பமாக வாழ்ப வர் என்றும் மகிழ்வுடன் இருப்பர். அவர்களை வாழ்க்கையில் உயர்ச்சி பெற்ற வரென உலகத்தவரே பாராட்டுவர். தமி ழர் பண்பாட்டில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் அன்பு நெறியில் ஆணுக்கே பெண்ணைப் பேணிவாழும் மனம் வேண்டும் எக்கிறார்.

'கோங்கன்ன குவிமுலையாள்
காமும் பனைத் தோட்கொடியிடையைப்
பாங்கென்ன வைத்துந்தான்
படர்சடை மேற் பான்மதியந்
தாங்கினான் பூம்புகார்ச் சாய்க்
காட்டன் தாள் நிழற்கீழ்
ஓங்கினார் ஓங்கினாரென
உரைக்கும் உலகமே'

# எமது நிலப்பகுதியை இந்தியாவுக்கு வழங்கும் ஏற்பாட்டை மீள்பரிசீலனை செய்யுங்கள்

## மூதூர் இடம்பெயர்ந்தோர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

எமது நிலப்பகுதியை இந்தியாவிற்கு வழங்கும் ஏற்பாட்டை மீள் பரிசீலனை செய்



யுங்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூதூர் இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மூதூர் இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

கடந்த 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம் பெற்ற போர்ச் சூழ்நிலையால் மூதூர் கிழக்குப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து வரும் நாம் இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் எமது மீள் குடியேற்றத்தினை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

ஏழு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் முடிவு எடுக்கப்பட்டு அதற்கான ஆரம்ப முயற்சிகள் செய்யப்படுவதனை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

இதே வேளை, கடற்கரைச் சேனை, சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, கூனித்தீவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக கணிசமான நிலப் பரப்பினை இந்தியாவிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகவும் அக்கிராமங்களைச் சேர்ந்த எம்மை பள்ளிக்குடியிருப்பு, இறால் குழி ஆகிய பிர தேசங்களில் குடியமர்த்த ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் அறிகின்றோம்.

**விவசாயமும் கால்நடை வளர்ப்புமே எமது தொழில்**

முற்றுமுழுதாக விவசாயமும் கால்நடை வளர்ப்புமே எமது தொழிலாகும். நாம் வாழ்ந்த பிரதேசம் அதற்கேற்ற நீர்வளம், நிலவளம், மேய்ச்சல் தரைகள், சந்தை வாய்ப்பு என்பவற்றைக் கொண்டுள்ளன.

ஆனால் தற்போது எம்மைக் குடியமர்த்த தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேசம் இந்த வாய்ப்புக்கள் அற்ற பிரதேசம் ஆகும்.

வெறும் குடியிருப்புக்கள் மட்டுமே வாழ்க்கைக்குப் போதுமானதல்ல என்ற அடிப்படையில் எமது சம்மதம் இன்மையை ஏற்கனவே அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

**பொருத்தமற்ற இடத்தில் குடியேற்றம் வேண்டாம்**

எனினும் இம்முயற்சிகள் கைவிடப்படாத சூழ் நிலையில் நாட்டின் தலைவர் என்ற வகையில் எமது நியாய பூர்வமான கோரிக்கைகளை தங்களிடம் தெரிவித்து அதற்கான பரிகாரத்தினை எதிர்பார்த்திருக்கின்றோம்.

❖ இழந்த எமது இயல்பு வாழ்வை மீட்டுத் தந்து எமது சொந்தக் கிராமங்களிலேயே மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுங்கள்.

❖ எமது கிராமங்களை உள்ளடக்கிய நிலப் பகுதியை இந்தியாவுக்கு வழங்கும் ஏற்பாட்டை மீள் பரிசீலனை செய்யுங்கள்.

❖ எமது கிராமங்களை உள்ளடக்காத வகையில் அல்லது எமது குடியிருப்புக்களாவது பாதிக்கப்படாத வகையில் அடையாளம் கண்டு நில ஒதுக்கீட்டை மேற்கொள்ள உதவுங்கள்.

❖ மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்ற பிரதேசத்தில் எம்மைக் குடியமர்த்த எடுக்கப்படும் முயற்சியினை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்.

❖ எமது மக்களுடன் கலந்தாலோசித்து மக்களின் வாழ்வுக்கும் எதிர்கால நன்மைக்கும் ஏற்ற விதத்தில் மீள்குடியேற்றத்தினை தொடர நடவடிக்கை எடுங்கள்.

காலம் காலமாக அரசாங்கங்களினால் புறக்கணிக்கப்பட்டு நீண்ட துயரத்தினைச் சந்தித்து இன்று இயல்பு வாழ்வை பறிகொடுத்து நிர்க்கதியாகியுள்ள எமக்கு தங்களால் மட்டுமே விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இக்கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

நாட்டின் தலைவர் என்ற வகையில் பெருமை மிக்க புத்த மதத்தினை பின்பற்றும் உத் தம தலைவன் என்ற வகையில் தங்களிடம் இருந்து ஒருநியாய பூர்வமான முடிவுக்காய் காத்திருக்கிறோம் என்றுஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

# கிழக்கு மாகாண முதலமைச்சராக தமிழர் தெரிவு குறித்து இந்தியா மகிழ்ச்சி

## நாடாளுமன்றக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபை முதலமைச்சராக தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை மகிழ்ச்சி அளிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளதாக நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதில் கடந்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய உயர்மட்ட குழுவினரின் கலந்துரையாடல் தொடர்பாகவும் விளக்கமளித்துள்ள அதேவேளை மேலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பரஸ்பர உணர்வுடன் வாழ்வது தமக்கு மகிழ்ச்சி அளிப் பதாக இந்தியா தெரிவித்துள் ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பிரதமரைக் கொலை செய்ய தேவதாசன் திட்டம் தீட்டினார்

## பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளரான கே.தேவதாசனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய நாடகவிழாவில் கலந்துகொள்ளச் சென்ற பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை கொலை செய்யத்திட்டம் தீட்டியமை தொடர்பான சந்தேகத்தின் பேரிலேயே முன்னாள் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரான கே.தேவதாசனும் வெள்ளவத்தை விடுதி ஒன்றின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டனர்.

தேவதாசன் கடந்த 2004ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு வரை தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

தற்கொலைத்தாக்குதல் புரிய வந்ததாக சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட பெண்ணை கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து தேவதாசனே தமது கடைககு அழைத்துவந்துள்ளதாகவும் தேவதாசனுக்கு சொந்தமான கொட்டாஞ்சேனை சுப்பர்மார்க்கட் முதலாம் மாடியில் உள்ள கடையில் இருந்தே பெண்கள் அணியும் தற்கொலை அங்கி கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

# உரிய காலத்தில் பதிவுசெய்யாவிட்டால் வேறு மாணவர்களைச் சேர்க்க நேரிடும்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய காலத்தில் பதிவுசெய்யாவிட்டால் குறைந்தளவு வெட்டுப் புள்ளிகளையுடைய வேறு மாணவர்களை யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் இரண்டு வளாகங்களிற்கும் சேர்க்க நேரிடும் எனப் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுக்கொண்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் அங்கு கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அச்சம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் உள்ள மாணவர்கள் தெற்குப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலுவ தனைப் போன்று தெற்கு மாணவர்களும் வடக்கு கிழக்குப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்க வேண்டும் எனப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார். (அ-5)

# பிலியந்தலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் மா அதிபருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

பிலியந்தலை பேருந்து குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்று இரண்டு தினங்களுக்கு பின்னர் பொலிஸ்மா அதிபரினால் இடமாற்றம் செய்யப்பட்டமை சட்ட விரோதமானது என தெரிவித்து பிலியந்தலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றிடம் விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தர விட்டது.

பொலிஸ்மா அதிபருக்கு இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் இல்லை என பிலியந்தலை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திடீர் இடமாற்றம் அரசியல் சாசனத்தில் 12 (1) என்ற சரத்திற்கு அமைய அடிப்படை உரிமை மீறலாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ-5)

# நீதியை பெற்றுத்தருமாறு இராதாகிருஷ்ணனிடம் தேவதாசனின் சகோதரர் வேண்டுகோள்

(கொழும்பு)

கொழும்பு குண்டு வைப்புகளுடன் தொடர்புடையவர் என்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான தமிழ் சினிமாத் துறை இயக்குநரான தனது சகோதரனுக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு கோரி சகோதரர் மலையக மக்கள் முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினரும் வாழ்க்கைத்தொழில் நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது சகோதரன் காணாமல் போன செய்தி யாழ்ப்பாண தினசரியில் இடம்பெற்றிருந்ததையடுத்தே கொழும்புக்கு வருகை தந்ததாகவும் தேவதாசின் மனைவி பிள்ளைகள் கரவெட்டியில் இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

கலைத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த சகோதரர் மீது சிங்களத் தினசரிகள் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி எழுதிவருவது கவலையளிப்பதாக தெரிவித்த அவர் இவ்விடயத்தில் தனது சகோதரனுக்கு நீதியைப் பெற்றுத்தரும்படி கோரியுள்ளார்.

தனது சகோதரன் 13.06.2008 இல் இந்தியாவிலிருந்து காதல் கடிதம் திரைப்பட வேலைகளை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதாகவும் தெரிவித்த அவர் தமிழர்கள் மீதான வெறுப்புக்களையும் முரண்பாடுகளையும் சகல துறையிலும் தூண்டுவதற்கு இனவாதிகளும் சில சிங்கள தினசரிகளும் முயற்சிப்பது வேதனைக்குரியது என்றார். (அ)

# அரசாங்கத் தரப்பு முக்கியஸ்தர்களினால் ஐ.தே.க வேட்பாளர்களுக்கு அழுத்தம்

## கயந்த கருணாதிலக தெரிவிப்பு


(கொழும்பு)

சப்பிரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களுக்கு அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் அழுத்தம் கொடுத்து வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இந்தத் தேர்தல்களில் தோல்வியடைவது உறுதி என்பதால் இவ்வாறானதொரு கீழ்த்தரமான செயலில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரி வித்துள்ளார். எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை உடனடியாக விலகிக்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# சேவாக், ரெய்னா அதிரடியில் பணிந்தது பாகிஸ்தான் அணி




(கராச்சி)

வீரேந்திர சேவாக், ரெய்னாவின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை இலகுவாக வீழ்த்தியது.

இதன் மூலம் தான் ஆடிய இரண்டு முதல் சுற்று ஆட்டத்திலும் வெற்றிபெற்ற இந்திய அணி புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது அணியாக இரண்டாவது சுற்றுக்கு நுழைந்தது.

இப்போட்டியில் தோல்வியடைந்த பாகிஸ்தான் அணி, ஹொங்கொங் அணியிடம் பெற்ற வெற்றியுடன் 2 புள்ளிகளுடன் இரண்டாவது நிலை அணியாக அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் ஆசிய கிண்ண ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று கராச்சியில் நடைபெற்ற முதல் சுற்று 5-வது ஆட்டத்தில் பி பிரிவைச் சேர்ந்த பாகிஸ்தான் - இந்திய அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, மலிக்கின் அதிரடி சதத்தின் உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சொகைப் மலிக் ஆட்டமிழக்காமல் 119 பந்துகளில் (16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 125 ஓட்டங்கள் எடுத்து காயம் காரணமாக ஆட்டத்தை இடை நிறுத்தியதுடன் யூனிஸ்கான் 59 ஓட்டங்களையும் மற்றும் சல்மான் பட் 35, மிஸ்பா உல்ஹக் ஆட்டமிழக்காமல் 31, மொகமெட் யூசுப் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 300 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, வீரேந்திர சேவாக், ரெய்னாவின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 42.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 301 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் வீரேந்திர சேவாக் 95 பந்துகளில் (12 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட) 119 ஓட்டங்களையும் ரெய்னா 69 பந்துகளில் (10 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 84 ஓட்டங்களையும் யுவராஜ் 48, தோனி ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இரண்டாவது விக்கெட்டுக்காக சேவாக், ரெய்னா ஜோடி இணைந்து 24.4 ஓவர்களில் 198 ஓட்டங்களைக் குவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் இப்ரிக்கார் அஞ்சும் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பாகிஸ்தான் அணியின் அசுர பந்து வீச்சாளரும் நம்பிக்கை நட்சத்திரமுமான உமர் குல் 1.2 ஓவர்கள் பந்து வீசிய நிலையில் காயம் காரணமாக ஆட்டத்தில்இருந்து வெளியேறினார்.

ஆட்டநாயகனாக இந்திய அணியின் ரெய்னா தெரிவானார். (5)

# மெண்டிஸ் கலக்கல்; இலங்கை அசத்தல்; விடைபெற்றது ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

(லாகூர்)

மெண்டிஸின் துல்லியமான பந்துவீச்சால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை 142 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது.

இதன் மூலம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி முதல் சுற்று ஆட்டத்தில் தான் ஆடிய இரு போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரில் இருந்து விடைபெற்றது.

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் ஆசிய கிண்ண ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று லாகூரில் நடைபெற்ற முதலாவது சுற்று 6-வதும் இறுதியுமான ஆட்டத்தில் ஏ பிரிவைச் சேர்ந்த இலங்கை-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களை எடுத்தது.

இதில் உடவத்த 67 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஜெயவர்த்தன 61 ஓட்டங்களையும் மற்றும் வீரரட்ண 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷா 3 விக்கெட்டுக்களையும். கல்ஹாஸ் மி, தங்ஜீர் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 291 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி, மெண்டிஸின் துல்லியமான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 142 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் சிறப்பாக ஆடிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஆம்ஜாட் அலி 77 ஓட்டங்களையும் அணித்தலைவர் சாகீப் அலி 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மெண்டிஸ் 5 விக்கெட்டுக்களையும் துஷார 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக இலங்கை அணியின் மெண்டிஸ் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் தான் ஆடிய 2 முதற் சுற்று ஆட்டத்திலும்வெற்றி பெற்று இலங்கை அணி ஏ பிரிவில் முதலாவது அணியாக 2-வது சுற்றுக்கு தெரிவானதுடன் புள்ளிகள் அடிப்படையில் பங்களாதேஷ் அணி 2-வது நிலை அணியாக அடுத்த சுற்றுக்கு தெரிவானது. (5)

# இறுதி நிமிடத்தில் துருக்கியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு நுழைந்தது ஜேர்மனி



யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடரில் ஜேர்மனி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. அரையிறுதி ஆட்டத்தில் அந்த அணி கடைசி நேரத்தில் கோல்அடித்து துருக்கியை 3:2 என வீழ்த்தியது.

ஆஸ்திரியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறன. இதில் ஜேர்மனி, துருக்கி, ஸ்பெயின் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

ஜேர்மனி மற்றும் துருக்கி மோதிய அரையிறுதி நேற்று அதிகாலை நடைபெற்றது. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜேர்மனி 3:2 எனும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

துருக்கி வீரர்களே ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்தினார்கள். இதனால் ஆட்டத்தின் 22-வது நிமிடத்தில் துருக்கி முதல்கோலை போட்டது. அந்த அணிக்காக உகுல் போரல் இந்த கோலை அடித்தார்.

இந்த கோலால் ஜேர்மனி அதிர்ச்சியடைந்தது. அடுத்த 4-வது நிமிடத்தில் பதில் கோல் அடித்து ஜேர்மனி சமன் செய்தது. பாஸ்டின் கவெஸ்னெஸ் டிக்கர் இந்த கோலை அடித்தார்.

முதல்பாதி ஆட்டம் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது. 2-வது பாதி ஆட்டம் மிகவும் பரபரப்பாக இருந்தது. 79-வது நிமிடத்தில் ஜேர்மனி 2-வது கோலை அடித்து 2:1 என்ற முன்னிலை பெற்றது. குளுஸ் தலையால் முட்டி இந்தக் கோலை அடித்தார்.

ஆட்டம் முடிய 11 நிமிடங்கள் இருந்ததால் ஜேர்மனி வீரர்கள் தற்காப்பு ஆட்டத்தில் ஈடுபட்டனர். ஆட்டம்முடிய 4 நிமிடம் இருந்த போது (86-வது நிமிடம்) துருக்கி வீரர் செமித் சென்டிரிக் 2-வது கோலை அடித்தார். இதனால் ஆட்டம்2:2 என சமநிலையானது.

யாருமே எதிர்பாராத ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் (90-வது நிமிடம்) ஜேர்மனி 3-வது கோலை அடித்தது. பிலிப்லாம் அடித்த இந்த கோலால் ஜேர்மனி ரசிகர்கள் ஆரவாரம் அடைந்தனர். இறுதியில் ஜேர்மனி 3:2 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. (5)

## விளையாட்டு

# பங்களாதேஷ் அணி தோல்வி

(லாகூர்)

பாகிஸ்தானில் நடந்து வரும் ஆசிய கோப்பை லீக் போட்டியில் பங்களாதேஷிற்கு எதிரான ஆட்டத்தில் சங்கக்கார சிறப்பான சதம் கடக்க இலங்கை அணி 131 ஓட்ட வித்தியாசத்தில் அசத்தலாக வென்றது.

நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்று ஆட்டத்தின் மூன்றாவது போட்டியில் இலங்கை-பங்களாதேஷ் அணிகள் மோதின. போட்டியில் முதலில் ஆடிய இலங்கை அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் பங்களாதேஷின் பந்துவீச்சை வெளுத்து வாங்கினார்கள்.

முதல் விக்கெட்டுக்கு 116 ஓட்டங்கள் சேர்த்த நேரத்தில் அதிரடியாக ஆடிய ஜெயசூர்யா 72 ஓட்டங்கள் எடுத்து ரஜாக் பந்தில் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து கபுகேதராவுடன் இணைந்த சங்கக்கார சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 91 பந்துகளில் 16 பவுண்டரிகள் உட்பட 101 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

கபுகேதரா 74 ஓட்டங்களில் ஆட்டமிழக்க சாமரசில்வா (19) வேகமான அரங்கு திரும்பினார்.

இறுதிக்கட்டத்தில் பங்களாதேஷின் சிறப்பான பந்துவீச்சில் வாஸ் (13), குலசேகரா (1), டில்சான் (29) அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங்கை 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்கள் எடுத்தது.

இமாலய எண்ணிக்கையை விரட்டிய பங்களாதேஷ் அணியினர் தொடக்கத்திலேயே விக்கெட்டுக்களை இழக்க ஆரம்பித்தனர்.

ஹசன், ரகின் ஓரளவு நல்ல ஓட்டங்களைச் சேர்ந்தபோதும் அது வெற்றிக்கு போதுமானதாக இல்லை.

ரகிம் (44), ஹசன் (35) ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

கடைசிக் கட்டத்தில் வெற்றி பெறும் எண்ணமே இல்லாமல் இருந்த பங்களாதேஷ் வீரர்கள் 50 ஓவரின் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ஆட்டநாயகனாக இலங்கையின் சங்கக்கார தேர்ந்தெடுக்கப்பட்டார். (5)

# நியூசிலாந்து திரில் வெற்றி

(லண்டன்)

நான்காவது ஒருநாள் போட்டியில் இறுதிப் பந்துவரை போராடிய நியூசிலாந்து அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3டெஸ்ட், ஒரு இருபது -20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி2:1 என்ற கணக்கில் தனதாக்கியதுடன் இருபது -20 போட்டியிலும்வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரில் நடைபெற்று முடிந்த 3 போட்டிகளில் ஒருபோட்டி முடிபின்றி நிறைவடைந்த நிலையில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றிருந்தது.

இதன் மூலம் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்த நிலையில் நான்காவது போட்டி நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணியை அழைத்தது.

இதன் மூலம் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷா 63 ஓட்டங்களையும் பெப்ரா 58 ஓட்டங்களையும் மற்றும் பெல் 48 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சௌத்திரி 3 விக்கெட்டுக்களையும் மில்ஸ், கில்லெஸ்டி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 246 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி இறுதிப்பந்துவரை போராடி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஸ்ஹுரிஸ் 69 ஓட்டங்களையும் ஓரம் 38, ஹப் 37 ஓட்டங்களையும் மற்றும் மில்ஸ் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சயிட் பொத்தம், சுவான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணியின் ஸ்ரைரிஸ் தெரிவானார். (5)

## கப்பல் சேவை...

நடைபெறமாட்டாது எனவும் நாளையே இச் சேவை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் பிரயாணம் மேற்கொள்வதற்கு ஏற்கனவே பதிவு செய்தவர்கள் பிரயாண ஏற்பாடுகளுடன் சனிக்கிழமை யாழ்.புகையிரத நிலையத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சு)

## யாழ்.போதனா வைத்தி...

வைத்திய அதிகாரிகள் கடமை நேரங்களில் அங்கு இருப்பதில்லை. அந் நேரங்களில் தனியார் மருந்தகங்களில் அவர்கள் கட்டணம் அறவிட்டுச் சேவை புரிகின்றனர்.

இதனால் கட்டணம் செலுத்தி சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாத, யாழ். போதனா வைத்தியசாலையை நம்பி வரும் ஏழை மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இதனைக் கவனத்தில் எடுத்து உரிய ஒழுங்குகளை மேற்கொண்டு போதனா வைத்தியசாலையின் உரிய மருத்துவ சேவைகளை மக்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அதில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இம் மகஜர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.அரச அதிபர் க.கணேஷ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இது தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்ற மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் யாழ்.போதனா வைத்திய சாலையின் வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக நீதிமன்றத் தகவல்கள் தெரிவித்தன. (சு-5)

## மன்னாரில் கடும் மோதல்...

சண்டைகளில் குறைந்தது 12 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தப் பகுதியிலுள்ள ஆண்டான்குளத்துக்கு வடக்கே அடையாளம் காணப்பட்ட விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீதும் அவர்களின் பதுங்குகுழிகள் மீதும் எம்.ஐ.-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள் படையினருக்கு உதவியாக நேற்றுக் காலை வான்வெளித் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

பாப்பாமோட்டைக்குத் தெற்கே பல இடங்களில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் சமர் இடம்பெற்றது. இப் பகுதியில் நேற்றுக் காலை முதல் இடம்பெற்று வரும் மோதல்களையடுத்துப் படையினருக்கு உதவியாக மன்னார் நகரப் பகுதியிலுள்ள தள்ளாடி பிரதான இராணுவத் தளம் உட்பட முக்கிய இராணுவ முகாம்களிலிருந்து பாப்பாமோட்டைப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல்களும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களையும் படையினர் நடத்தியிருப்பதாக மன்னாரிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே மன்னார் பிரதேசத்திலுள்ள கேந்திர முக்கியத்தும் வாய்ந்ததாகக் கூறப்படும் பெரியமடுக் கிராமத்தை உள்ளடக்கிய 7 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள நிலப் பகுதியை இராணுவத்தினர் நேற்றுக் கைப்பற்றியிருப்பதாகவும் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைப் படையினர் பலப்படுத்தி வருவதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது. (சு)

## பிக்கு மாணவர்களின்...

சந்திப் பகுதியை அண்மித்த போது ஆர்ப்பாட்டக்காரர்களை மேலும் முன்னகர விடாது பொலிஸார் வீதித் தடைகளைப் போட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும் தண்ணீரைப் பாய்ச்சியும் கலைத்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த பிக்குமாணவர்கள் சற்றுத் தூரம் பின்னகர்ந்து நூலக நிலையத் சந்தியில் அமர்ந்தவாறும் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர். இதனால் சுமார் 5 மணிநேரமாகப் பெரும் வாகன நெரிசல் கொழும்பில் ஏற்பட்டது.

நேற்று மாலை வரை ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லாததால் பொலிஸார் மீண்டும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் தண்ணீர்ப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். கையில் வைத்திருந்த பதாகைகளால் திருப்பித் தாக்கினர். இதனையடுத்து அங்கு கலகம் அடக்கும் பொலிஸார் விரைந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தமது பலப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் அரசுக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்கு மாணவர்கள் 23 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 15 பேர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் 8 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக பிக்கு மாணவர்களுக்கு எதிராகப் பொலிஸார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டமை கொழும்பில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (சு-5)

## புலிகளுக்கு எதிரான யுத்த...

அவர் மேலும் கூறியதாவது, பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் எனும் இந்தியாவின் நிலைப்பாட்டிலேயே இலங்கை அரசாங்கம் உள்ளது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை நிறுத்துமாறு கோரவே இந்திய உயர் மட்டக் குழுவினர் இலங்கை வந்ததாக ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு இந்தியா எவரிடமும் கூறவில்லை. இந்திய உயர் மட்டக் குழுவினரின் இலங்கை விஜயம் எந்தவிதமான உள்நோக்கங்களையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை - இந்திய உறவு முன்னெப்போதும் இல்லாதவாறு உச்சக்கட்டத்திலிருப்பதாகவும் அமைச்சர் அநுர பிரிய தர்ஷன யாப்பா இங்கு கூறினார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத் தரப்புக்கு மாறுவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் தொடர்பான விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தோன்றியிருக்கும் கருத்து முரண்பாடுகளையடுத்தே ஒரு குழுவினர் அக் கட்சியிலிருந்து வெளியேற தீர்மானித்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (சு-5)

## இந்.பிரதமரின் இலங்கை...

னரான அருணகிரி கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கடுமையாக தாக்கப்படுகின்றமை குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தனது இலங்கை விஜயத் தில் கலந்துரையாடப்பட வேண்டுமென தமிழக முதலமைச்சர் வலியுறுத்தியிருப்பதாக முதலமைச்சர் அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

மீனவர்களின் விடயம் குறித்து பிரதமர், இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவது அவசியமென தமிழக முதலமைச்சர் கூறியுள்ளார். இந்த விடயம் தவிர்க்கப்பட வேண்டிய விடயம் அல்ல என்ற நிலைப்பாட்டையே முதலமைச்சர் கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இரண்டு வெவ்வேறு விடயங்கள் தொடர்பாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோவும் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இருவேறு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்களின் உயிர்கள் காவுகொள்ளப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் அதேவேளை இலங்கைத் தமிழர்கள் மீது தொடர்ந்தும் அந் நாட்டு அரசாங்கம் தாக்குதல்லை நடத்திவரும் நிலையில் கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாதென வை.கோ. தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (சு-5)

## வவுனியாவில்...

யடிப்புத் தாக்குதலைத் தொடங்கினர். சில மணி நேரங்களில் படையினர் முன்னகர்வு முறியடிக்கப்பட்டு அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந் நிலையில் தமது நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்ற படையினர் மீண்டும் முன்னகர்வு முயற்சினை மேற்கொண்டனர். இவ்வாறு படையினர் முன்னகர்வதும் அதனை விடுதலைப்புலிகள் முறியடிப்பதும் படையினர் இழப்புக்களுடன் தமது நிலைகளுக்குப் பின்வாங்கிச் செல்வதுமாக கள நிலைமைகள் தொடர்ந்தன.

பிற்பகல் 3.30 மணி வரைக்கும் படையினரின் முன்னகர்வு முயற்சிகள் தொடர்ந்தன. இதில் 8 படையினர் கொல்லப்பட்டனர். 24க்கும் அதிகமான படையினர் படுகாயமடைந்தனர். இழப்புக்களுடன் படையினர் காயமடைந்த மற்றும் கொல்லப்பட்ட தமது சகாக்களையும் தூக்கிக் கொண்டு பழைய நிலைகளுக்குப் பின் வாங்கிச் சென்றனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (சு-5)


6ஆம் மாத நினைவஞ்சலி



திரு. தியாகராஜா மகேஸ்வரன்

(கொழும்பு மாவட்ட பாராளுமன்ற

உறுப்பினரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்)

பிறப்பு :10.01.1966 இறப்பு:01.01.2008

பொன்னம்பல ஈசனுக்கு புண்ணியனே பூசை செய்யப்போனீரே
அன்பான எங்கள் அருமை அப்பா
ஆறு மாதம் இன்று ஆறுயுகம் ஆனதப்பா
பொன்னம்பலம் தரிசிக்க போன பொன்னான எங்களப்பா
தங்கையைத் தவிக்கவிட்டுத் தனிவழியே போனீரோ
பென்னம் பெரும் வழியே பேசாது போனீரோ
திக்குத் தெரியாமல் திசைமாறிப், போனீரோ
பக்குவம் தெரியாத உங்கள் பாலகனை
பரிதவிக்க விட்டு பறந்து சென்றதென்ன?
அப்பா! எங்கள் அருமை அப்பா! நேச அப்பா!
பிரணவன் நானப்பா! பசியால் வாடவில்லை
என் அப்பாவின் பாசத்தால் வாடுகிறேன்
பொன்னான எங்கள் அப்பா பிரிவால்
வாடுகிறேன் தங்கமான எங்கள் அப்பா
உங்கள் தயவைநாடி நித்தம் வாடுகிறேன்
எப்போ வருவாயப்பா? ஏக்கம் தவிர்ப்பாயப்பா?
பொன்னம்பல ஈசனுக்கு பூசை செய்ய
புண்ணியனே எங்கள் அப்பா போனீரே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

-பிரணவன் மகேஸ்வரன்

அன்னாரின் நினைவு தினத்தை முன்னிட்டு காரைநகர் ஈழத்து சிதம்பரம் ஆலய அறப்பணி நிலையம், நல்லூர் துர்க்கா மணி மண்டபம், தொண்டமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமம் என்பவற்றில் இன்று மதியம் அன்னதானம் வழங்கப்படும்.

* இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.